விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

Website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 15 வெள்ளிக்கிழமை (01.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 317

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பிரித்தானிய பிரதமருக்கு விரிவான அறிக்கை!

## யாழில் வைத்து கையளிக்க கூட்டமைப்பு திட்டம்

(கொழும்பு)

**வடக்குக் கிழக்கின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனிடம் கையளிக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

கொழும்பில் இம் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல தலைவர்களின் உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ள பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், வடமாகாணத்துக்கும் விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்நிலையில், யாழ்ப்பாணத் துக்குச் செல்லவுள்ள பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனை சந்தித்து, வடக்குக் கிழக்கின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர பில் விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுளளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேசசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் வடமாகாணத்துக்கு விஜயம் செய்து, இங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்வதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளார்.

அவரது யாழ்ப்பாண பயணத்துக்கான ஏற்பாடுகளை இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகம் மேற்கொண்டு வருகிறது என்றும் கூறியுள்ளார்.

அதேவேளை, பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ள போதி

19-ம் பக்கம் பார்க்க

## விளைவுகளை சந்திக்க நேரிடும் மன்மோகனுக்கு கலைஞர் எச்சரிக்கை





(சென்னை)

கொழும்பில் இம் மாதம் இடம் பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்றால் அதன் விளைவுகளை காங்கிரஸ் கட்சி சந்திக்க நேரிடும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை கோபாலபுரத்தில் உள்ள தனது இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பில் எவரும் பங்கேற்கக் கூடாது. இவ்விடயம் தொடர்பில் தமிழக் அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் எதிர்ப்பை மீறி பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டால், அதன் பலன்களை காங்கிரஸ் கட்சி அனுபவிக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இதனிடையே பொதுநலவாய மாநாட்டில்பங்கேற்பது குறித்து தமிழக மக்களின் உணர்வுகளு க்கு மதிப்பளிக்கும் வகையிலான முடிவை பிரதமர் மன்

19-ம் பக்கம் பார்க்க




சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை வடக்கில் மீளக் குடியமர்த்துமாறு அரசாங்கத்தைக் கோரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்துள்ளது. நேற்று மாலை கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் ஒன்றுகூடிய அரசாங்க ஆதரவுக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி உட்பட மற்றும் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதன்னை படத்தில் காணலாம்.

## பொதுநலவாய மாநாட்டுக்கு வருமாறு அழைக்கவில்லை

### த ஹிந்து செய்திக்கு முதலமைச்சர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கிற்கு தன்னால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கும் கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுந[illegible]ய மாநாட்டிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதம் தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரனின் அந்தரங்கச், செயலாளர் ஏ.சுந்தரலிங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சென்னையில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கில தினசரியான ஹிந்துவில் மன்மோகன் சிங்கை யாழ்ப்பாணத்திற்கு அழைக்கிறார் விக்னேஸ்வரன் என்ற தலைப்பில் பிரசுரமான செய்தி பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளவேண்டுமென்று முதலமைச்சர்வலியுறுத்து

19-ம் பக்கம் பார்க்க

## மன்மோகன் சிங்குக்கு முதலமைச்சர் அழைப்பு

(சென்னை)

கொழும்பில் இம் மாதம் இடமபெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இது வரை அதிகாரபூர்வமாக அறிவிக்காத நிலையில் அவரை யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யுமாறுவடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளதாக த ஹிந்து தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன் 13-வது திருத்தச் சட்டமூலத்துக்கு அமைவாக வடமாகாணசபைக்கு தேர்தலை நடத்தும்படி இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுத்தமைக்கும் தனது கடிதத்தில் விக்னேஸ்வரன் நன்றி தெரிவித்துள்ளார்.

இதனிடையே பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் முரே மக்கல்லி வடமாகாணத்துக்கு விஜயம் செய்து போருககுப் பின்னரான நிலைமைகளை அவதானிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு ஆகிய விடயங்களில் முன்னேற்றம் ஏற்படுவதில் நியூசிலாந்து மிகுந்த ஆர்வம் கொண்டுளளதாகவும், வடமாகாண நிலைமைகள் தொடர்பாக தமது நாட்டுப் பிரதமருக்கு தான் அறிக்கை ஒன்றைக் கையளிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (எ-8)

# வீடு திரும்பினார் முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று வியாழக்கிழமை நண்பகல் வீடு திரும்பியுள்ளார்.

24 மணித்தியால இதயத்துடிப்பு பரிசோதனைக்காக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

முதலமைச்சரின் மருத்துவ பரிசோதனைகள் நேற்று நண்பகல் 12 மணிக்கு நிறைவடைந்துள்ளன. இதனால் அவர் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளார். (எ-4)

# இலங்கை விஜயம் குறித்து உயர்மட்ட ஆலோசனை

## மன்மோகன் சிங், சோனியா பங்கேற்பு

(புதுடில்லி)

கொழும்பில் இம் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி உள்ளிட்ட அக்கட்சியின் மூத்த தலைவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆராய்ந்துள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று தமிழக அரசியல் தலைவர்கள் அழுத்தங்களைப் பிரயோகித்து வரும் நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்ற இச்சந்திப்பில், காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக்குழுவில் அங்கம் வகிக்காத இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரும் கலந்து கொண்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆயினும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக எந்த தகவலும் இது வரை வெளியாகவில்லை.

இதனிடையே, பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ளக்கூடும் என்று கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# பஸ் கட்டணங்கள் 7 வீதத்தால் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி, பேருந்துகளுக்கான பயணக் கட்டணம் இன்று முதல் 7 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன என யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் அ.கெங்காதரன் அறிவித்துள்ளார்.

புதிய கட்டண விபரப்படியே இன்றைய சேவைகள் இடம்பெறும் எனவும் அவர் கூறினார். (எ)

# கிழக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கிழக்கு மாகாண அபிவிருத்திற்கான ஒதுக்கீடுகளிலும், சிற்றூழியர் நியமனங்களிலும் இன மற்றும் பிரதேச ரீதியாக பாரபட்சம் காட்டப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டுகின்றது.

குறித்த விடயங்களில் தமிழர்களும் தமிழ் பிரதேசங்களும் புறக்கணிக்கப்படுவதாக கவலை வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முறைகேடான முறையில் ஆளும் தரப்பு நடந்து கொள்வதாகவும் கூறுகின்றது.

குறிப்பாக நடப்பாண்டில் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் 40 மில்லியன் ரூபாய் நிதியில், 30மில்லியன் ரூபாய் நிதி கல்வி அமைச்சர் விமலவீர திஸநாயக்கா பிரதிநிதித்துவப்படுத்தும் அம்பாறை மாவட்ட சிங்கள பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெத்தினம் கூறுகின்றார்.

சுகாதார அமைச்சு மற்றும் முதலமைச்சரின் கீழ்வரும் உள்ளூராட்சி அமைச்சு உட்பட ஏனைய அமைச்சுகளிலும் இதே நிலைதான் காணப்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி திட்டத்திற்கான கிராமங்கள் தெரிவிலும் தமிழ் கிராமங்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குற்றஞ்சாட்டுகின்றது.

தமிழர்கள் எவரும் இல்லாத மாகாண அமைச்சர்கள் வாரியத்திலுள்ள நான்கு முஸ்லிம் அமைச்சர்களும் ஒரு சிங்கள அமைச்சரும் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்தில் அவர்களது பிரதேசம் அவர்களது இனத்தை மையப்படுத்தி ஒதுக்கீடுகளை செய்யும் போது மத்திய அரசு போன்று கிழக்கு மாகாண சபையும் தமிழர்களையும் தமிழ் பிரதேசங்களையும் புறக்கணிப்பதாக மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார். (எ-8)

# அதிவேக பாதை திறப்பு விழாவில் ஜனாதிபதி முன் பாடிய மேர்வின்

பேலியகொடவில் கடந்த 27 ஆம் திகதி முற்பகல் கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக பாதை திறப்பதற்கு முன்னர் அங்கு கூடியிருந்த அமைச்சர்கள் மற்றும் முக்கிஸ்தர்கள் மத்தியில் எங்கே களனியின் உரிமையாளர் எனக் கூறி ஜனாதிபதி ஒருவரை தேடியதை காணக் கூடியதாக இருந்தது.

ஜனாதிபதி, அமைச்சர் மேர்வின் சில்வாவை தான் தேடுகிறார் என்பதை புரிந்து கொள்ள அங்கிருந்தவர்களுக்கு நீண்ட நேரம் செல்லவில்லை. அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கு மிகவும் பின்னால் அமைச்சர் மேர்வின் சில்வா காணப்பட்டார்.

ஜனாதிபதி தன்னை அழைக்கும் சத்தத்தை கேட்ட அமைச்சர் மேர்வின் சில்வா அங்கிருந்தவர்களை பின்னுக்கு தள்ளிவிட்டு, என்றும் காணாத வகையில் மிகவும் மகிழ்ச்சியான முகமலர்ச்சியுடன் ஜனாதிபதிக்கு அருகில் சென்றார்.

அவர் வெறுமனே ஜனாதிபதியிடம் செல்லவில்லை. கூடியிருந்தவர்களை நகைச்சுவை வெள்ளத்தில் ஆழ்த்தும் பாடலை பாடிக் கொண்டே ஜனாதிபதிக்கு அருகில் சென்றார்.

**தவறு செய்தாலும் மனதால் செய்யவில்லை...நோகச் செய்யவும்...பழிவாங்கவும் அல்ல...ஏன் என்னை பழிவாங்கிறீர்கள். எனக்கு புரியவில்லை...தவறு நேர்ந்திருந்தால் மன்னித்தருள்க...நீங்கள் என் இரண்டு கண்களை போன்றவர்** என்று அமைச்சர் மேர்வின் சில்வா பாடினார்.

இவ்வாறு பாடிக் கொண்டு ஜனாதிபதியிடம் சென்ற மேர்வின் சில்வாவை ஜனாதிபதி சிறுவனை தடவி கொடுத்து தேற்றுவது போல் ஜனாதிபதி தேற்றினார்.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக பாதையை திறந்த ஜனாதிபதி ஓட்டிச் சென்ற வாகனத்தில் ஜனாதிபதியின் பாரியார் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்ததுடன் பின் ஆசனத்தில் அமர்ந்து செல்ல ஜனாதிபதி மேர்வின் சில்வாவை அழைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-8)

# கொரியத் தூதுவர் வலி.வடக்குக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

கொரிய நாட்டு அரசியல் விவகாரங்களுக்கான பொறுப்பாளர் மரீன்லீ நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் வலி.வடக்கு மக்களைச் சென்று பார்வையிட்டுள்ளார்.

வலி.வடக்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளர் எஸ்.சஜீபனுடனேயே அரசியல் விவகாரங்களுக்கான பொறுப்பாளர் சுன்னாகம் சென்று வலி.வடக்கு மக்களினை சந்தித்துள்ளார்.

சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்டுள்ள சபாபதிப்பிள்ளை கண்ணகி அம்மன் முகாமில் தங்கியுள்ள வலி.வடக்கு மக்களினையே அரசியல் விவகாரங்களுக்கான பொறுப்பாளர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது மக்கள் தமது பிரச்சினைகளினை கூறியதோடு எமது நிலம் எமக்கு வேண்டுமெனவும் வலியுறுத்தியிருந்தனர்.

முகாம் வாழ்க்கையினால் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும், பாடசாலைகளில் முகாம் மக்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை எனவும், முகாம்களில் உள்ள பெண்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளதாகவும் மொத்தத்தில் முகாமில் வாழ்வோர் தரக்குறைவாகவே பார்க்கப்படுகின்றனர்.

ஆகையினால் எமது நிலங்களினை மீட்டுத் தந்து நாம் சொந்த நிலங்களில் மீள் குடியேறுவதற்கு வழியேற்படுத்தித் தருமாறும் அம் மக்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை கொரியாவின் அரசியல் விவகாரங்களுக்கான குறித்த பெண் அதிகாரியின் சுன்னாகம் பயணம் உத்தியோக பூர்வமற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4)

# கும்பாபிஷேகம்

பருத்தித்துறை வராத்துப்பளை அருள்மிகு நெல்லியோடை பெரியதம்பிரான் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 10.30 மணி வரை உள்ள சுப வேளையில் நடைபெறும்.

மேற்படி மகாகும்பாபிஷேக கிரியைகள் பிரம்மஸ்ரீ அ.பிரேமச்சந்திரன் குருக்கள் தலைமையில் நடைபெறும். (எ)

# வேலணை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்/வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சேர்.வை.துரைசுவாமி ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் கல்லூரியின் நுழைவாயில் கலைமாடம் திறப்பு விழாவும் சரஸ்வதி சிலை திரை நீக்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்க ளாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கௌரவ விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா,

கல்லூரி தகைமைசார் விருந்தினர்களாக தொழிலதிபர் எஸ்.பி.சாமி, முன்னாள் கல்லூரி ஆசிரியர் பி.எம்.அழகரத்தினம், முகாமைத்துவ கணக்காய்வு பொது திறைசேரியின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் க.மகாலிங்கம், தொழிலதிபர் சி.குகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-8)

# இரத்ததான முகாம்

இலங்கை மின்சார சபையின் 44 ஆவது பிறந்த தினம் இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

அதனை முன்னிட்டு மின்சார சபையின் யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இன்று சுன்னாகம் மயிலங்காடு ஸ்ரீ முருகன் பாடசாலை மற்றும் சுன்னாகம் றோ.க.த.க பாடசாலை ஆகியவற்றில் சிரமதானம் யாழ்.பிராந்திய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அலுவலகம் சுன்னாகத்தில் இரத்தான் முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)


பணியாட்கள் தேவை

தொலைத்தொடர்பு நிலையத்தில் பணி புரிவதற்கு நல்லொழுக்கம் நற்பண்பு உள்ள பெண் பணியாட்கள் தேவை.
யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.
காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை
(4398)

செல்வா ரெலிகொமினிக்கேசன்
124, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (பொஸ்கோ பாடசாலை சந்தி)
0777 193 173



Shakthy microtec
Hotline: 0779120842
Computer wholesaler



19"-Rs.7,000/-
17"-Rs.6,000/-
Rs.15,000/- Rs.20,000/- Rs.21,000/-
Rs.16,500/-
Branded கணனிகள், மடிக் கணனிகளை(Laptop) குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-5320)

Head Office: 4500, Sheppard Ave, East, unit 27, Toronto, ON, M1S 1V2, Canada.
Branches: No.191/1, Grand pass Road, Colombo - 14
No.170, Palaly Road, Vigneswara Building, Kondavil East, Jaffna.
Hotline : 0779120842



"Green Grass அமர்க்கள தீபாவளி 2013"
இன்னிசை இரவு விருந்து
Dj Music
Buffet Dinner
Audience Talents
Dance (cultural & wester
இடம் : சங்கிலியன் மண்டபம், கிறீன் கிறாஸ்
33, ஆசிர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
590/- மட்டுமே...
காலம் : 02.11.2013 மாலை 7.00
நுழைவுச்சீட்டுக்களை முற்பதிவு செய்துகொள்ள இன்றே அழையுங்கள் 0777803210
021 222 1686 | 021 222 4385 | 021 7201194 | www.jaffnagreengrass.com | greengrassjaffna@gmail.com
(சி-5318)

# இன்று ஒரு தகவல்

## இளவரசரின் பணிவு

ஒரு பெரிய காட்டின் மத்தியில் ஒரு ஆச்சிரமம் இருந்தது. அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவர் பல்வேறு இடங்களி ருந்து வரும் குழந்தைகளுக்கும் பாடம் கற்பித்து வந்தார்.

ஏழை–பணக்காரர் என்ற வேறுபாடின்றி எல்லோரும் அவரிடம் தங்கள் பிள்ளைகளை கல்வி கற்க அனுப்பி வைத்தார்கள். அரசனின் பிள்ளைகள் கூட அவரிடம்தான் படிக்க வருவார்கள்.

ஆனால், அந்த முனிவரைப் பெறுத்தவரையில் எல்லாப் பிள்ளைகளும் ஒன்றுதான். அவர் சொல்லும் வரைக்கும் மாணவர்கள் அங்கேயே இருந்து படிக்க வேண்டும்.

ஒரு சமயம் ஒரு ராஜகுமாரனும் அவரிடம் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பதினைந்து வயதிருக்கும்.

சில வருடங்களுக்குப்பின் அந்த முனிவர் தன்னிடமிருந்த மாணவர்களுக்கெல்லாம் பரீட்சை வைத்தார். அவர்களின் அறிவு முதிர்ச்சியைக் கணிப்பதற்குப் பல சோதனைகள் நடத்தினார்.

அவர் வைத்த பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

கடைசியில் ஒரே ஒரு மாணவன் மட்டும் இருந்தான். அவனை மட்டும் முனிவர் வீட்டுக்கு அனுப்பவில்லை.

யார் அவன் தெரியுமா? அவன்தான் ராஜகுமாரன். அந்த ராஜகுமாரனின் தந்தைக்கு வயது ஏறிக்கொண்டே போயிற்று.

இளவரசன் வந்தால் விரைவில் அவனுக்குப் பட்டம் கட்டி விட்டு தான் விலகிக் கொள்ளலாம் என்று அவர் நினைத்தார். இளவரசனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். ஆனால் இளவரசன் வரும் வழியைக் காணோம்.

ராஜா பார்த்தார். சரி, நேரில் விபரம் தெரிந்து கொண்டு வரலாம் என்று காட்டுக்குப் புறப்பட்டார். அங்கே சென்று முனிவரைப் பாா்த்தார்.

ராஜா மெதுவாக முனிவரிடம், "எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பு விட்டீர்களாமே... என் பிள்ளையை மட்டும்..." என்று சொல்லி இழுத்தார். அதற்கு முனிவர் உடனே பதில் சொல்லவில்லை.

ராஜாவை அழைத்துச் சென்று விருந்தினர் குடிசையில் தங்க வைத்தார். பின்னர் சொன்னார்.

"உங்கள் மகன் எல்லாப் பாடங்களிலும் முதல் இடம்பெற்று விட்டான். அப்படி முதலாவதாக வரும் மாணவனுக்கு நான் இன்னொரு பரீட்சை வைப்பது வழக்கம். அதிலும் அவன் முதலாவதாக வந்து விட்டால் அவன் ஒரு பெரிய வித்துவான் என்ற கௌரவத்தை அடைவான்" என்றார் முனிவர்.

அவ்விதம் சொல்லிவிட்டு அவர் அங்கிருந்து சென்றார். ராஜா அன்றிரவு அங்கேயே தங்கினார்.

காலையில் எழுந்து வெளியில் வரும்போது, தூரத்தில் ஒருவன் ஒரு கையில் கோடரியை வைத்துக் கொண்டு தலையில் ஒரு பெரிய விறகுக் கட்டையை சுமந்து கொண்டு வருவது தெரிந்தது. யாராவது விறகு வெட்டியாக இருக்கும் என்று அரசர் நினைத்தார்.

அருகில் வந்ததும் உற்றுப் பார்த்தார். பார்த்தால்... அது தன்னுடைய மகன்! திகைத்துப்போய் விட்டார்.

"என்ன இது? ஒரு ராஜகுமாரனைக்கூட இதுபோன்ற வேலைகளையெல்லாம் செய்யச் சொல்கிறார்களே!" என்று நினைத்தார். ராஜகுமாரன் விறகுக் கட்டையைக் கொண்டுபோய் கொல்லைப் பக்கம் வைத்தான்.

அதேசமயம் முனிவர் அங்கே வந்து, விருந்தினர் குடிசையின் வாசல் பக்கத்தை கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்யச் சொன்னார். இளவரசனும் நன்றாகச் சுத்தம் செய்தான்.

இதைப் பார்த்த ராஜா, "மகனே! என்ன வேலை செய்கிறாய்? துடைப்பத்தைக் கீழே போடு!" என்றார்.

அதற்கு அந்த ராஜகுமாரன், "தந்தையே! இது என்னுடைய குருதேவரின் உத்தரவு! இங்கே நான் ஒரு மாணவன். இங்கே அரசனும் ஒன்றுதான்! ஆண்டியும் ஒன்றுதான்! குருதேவர் சொல்வதை மறுக்காமல் செய்வதுதான் எங்கள் கடமை!" என்றான்.

அந்தச் சமயத்தில் முனிவர் அங்கே வந்து இளவரசனை தட்டிக் கொடுத்து, "அரசே! உங்கள் பிள்ளை என்னுடைய கடைசிப் பரீட்சையிலும் சித்திபெற்று விட்டான். பணிவுதான் மாணவர்களின் உயர்ந்த குணம். குருநாதர் சொல்வது மனதுக்குப் பிடிக்காவிட்டாலும் கூட மறுக்காமல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்ற விவேகம் அவர்களுக்கு வந்துவிடும்! இந்தக் குணம் வந்து விட்டால்... அவர்கள் எத்தனை கடினமான வேலையாக இருந்தாலும் கூட சுலபமாக செய்து முடிப்பார்கள்.

துன்பத்திலும் துவண்டுபோக மாட்டார்கள். இந்தப் பணிவும் விவேகமும் அவர்களிடத்தில் மன உறுதியை ஏற்படுத்தும். அந்த உறுதி உங்கள் மகனுக்கு வந்துவிட்டது. இனி நீங்கள் அவனை ழைத்துச் செல்லலாம். அவன் நிச்சயமாக பேரும் புகழும் அடைவான்" என்றார்.

ராஜா முனிவரிடம், "குருதேவா... புரிந்து கொண்டேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்றார். பின் இளவரசனை அழைத்துக் கொண்டு நாட்டுக்குத் திரும்பினார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு முதலமைச்சர் எதை குறிப்பிடினும் மத்திய அரசு செவிசாய்க்க போவதில்லை

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசாங்கத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக சிங்கள மக்களே உள்ளனர். சிங்களவர்களைப் பகைத்துக் கொண்டு அரசாங்கத்தினால் எதனையும் செய்யமுடியாது. நாட்டில் சமாதானமும் அமைதியும் நிலவவேண்டும் என்பதற்காகவே சிறு பான்மையினரை ஆதரித்துக் கொண்டு செயற்படுகின்றோம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர கருத்துத் தெரிவிக்கையில்;

ஐக்கிய தேசியக்கட்சி சிறுபான்மையினரை ஆதரித்து ஆட்சி அமைக்கலாம் என்ற நினைப்பில் செயற்படுகின்றது. இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சிக்கு அவர்களின் அர்த்தமற்ற கொள்கைகளே காரணமாகும்.

இலங்கையில் சிங்கள மக்களைப் பகைத்துக் கொண்டு எதிர்க்கட்சியால் அரசாங்கத்தை அமைக்கமுடியாது. பெரும்பான்மையினமான சிங்களவர்களே இந்த நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கின்றனர்.

இலங்கையிலுள்ள சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்தாலும் சிங்கள மக்களின் வாக்குகள் அதிகமானதாகவே உள்ளன. இதனைப் புரிந்து கொண்டதனால் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் உறுதியான ஒரு நிலையில் பலமான ஆட்சியை அமைத்து அரசாங்கத்தை நடத்துகின்றது.

எனினும் ஐக்கிய தேசியக்கட்சி சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெற்று அவர்களினூடாக ஆட்சியை அமைக்கலாம் என நினைக்கின்றது. அதன் காரணத்தினாலேயே இன்று வடக்கையும், வடக்கின் முதலமைச்சரைப் பற்றியும் புகழாரம் சூட்டி வடக்கின் உரிமைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறது.

இன்று வடக்கில் அமைதியும் சமாதானமும் நிலவுகின்றது. 30 வருடங்களாக இருந்த நிலைமை மாறி இன்று வடக்கிலுள்ள அனைத்து மக்களும் சுதந்திரமாக செயற்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனினும் இதனைக் குழப்பி மீண்டுமொரு போர்ச் சூழலை உருவாக்கவே ஐக்கியதேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முயல்கின்றன.

உண்மையிலேயே இலங்கை இன்று அழுத்தங்களை சந்திப்பதற்கும் அன்று யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கும் ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழ் பிரிவினைவாத கட்சிகளுமே காரணமாகும்.

அப்பாவி மக்களையும் சர்வதேசசக்திகளையும் குழப்பி நாட்டை பிரிப்பதற்கு இக்கட்சிகள் துணை நிற்கின்றன.

பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்களையும் சொத்துக்களையும் இழந்து பெற்ற வெற்றியையும் பாதுகாத்து வரும் நாட்டினையும் பிரிவினைவாதிகளின் கைகளில் கொடுக்க நாம் தயாராகவில்லை. யார் எவ்வாறான கருத்துக்களை முன் வைக்கினும் ஜனாதிபதியின் முடிவே இறுதியானது.

வடக்கில் இருந்து கொண்டு விக்னேஸ்வரன் எதைக் குறிப்பிட்டாலும், எந்தக் கட்டளைகளைப் பிறப்பித்தாலும் மத்திய அரசாங்கம் செவிமடுக்கப் போவதில்லை.

நாட்டிற்கும் மக்களுக்கும் எது சிறந்ததோ அதையே அரசாங்கம் செய்யும் எனவும் அவர் தெரிவித்தார். (அ–2)

# சுயதொழில் நிதியுதவிக்கு ஐந்து பயனாளிகள் தெரிவு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் சமூக சேவைத் திணைக்களம் ஊடாக, பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 5 பயனாளிகளுக்கு சுயதொழிலுக்கான நிதியுதவி எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயல்கத்தில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை யுனிசெவ் நிறுவனம், ஒரு பயனாளிக்கு 35 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலிருந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சா.மகாதேவன்(கரவெட்டி மேற்கு), ஆ.பரமநாதன் (அல்வாய் தெற்கு), பே.ஜெயசீலன் (நெல்லியடி), தி.அபிராமி (அல்வாய் கிழக்கு), ஜெ.யோகநந்தினி (கரணவாய் கிழக்கு) ஆகியோர் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற விரும்பின், கரவெட்டி பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவைத் திணைக் களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (அ–9–60)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 120 |
| தக்காளி | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 40 | 40 | 80 |
| கரட் | 60 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 220 | 180 | 220 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 160 |
| பாகற்காய் | 120 | 110 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 30 | 60 |
| பயற்றங்காய் | 100 | 90 | 100 |
| லீக்ஸ் | 120 | 70 | 90 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 100 | 80 | 140 |
| முருங்கைக்காய் | 70 | 40 | 80 |
| போஞ்சி | 140 | 100 | 160 |
| கீரை – 1 பிடி | 10 | 10 | 20 |
| தேசிக்காய் | 250 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40-60 | 50 | 35-50 |

# இராசி பலன்

01.11.2013
(ஐப்பசி 15, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 8.50 மணிவரை
அத்தம் பின்னிரவு 1.30 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
மூன்றாவது ஐப்பசி வெள்ளி
பிரதோச விரதம், அமிர்தசித்தம்

**மேடம்** கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும், குடும்பத்தில் குதூகலம் ஏற்படும் நாள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் பெருகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள்.

**மிதுனம்** தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சிதரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும்.

**கடகம்** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிங்கம்** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சான்றோர் சந்திப்புண்டு, இறைவழிபாட்டால் இன்பங்கள் கூடும், பேச்சில் இனிமை பிறக்கும்.

**கன்னி** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், மனதிற்கு நிம்மதி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பிறர் உதவியுண்டு.


**மகரம்** போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்,வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும்.

**கும்பம்** துயரங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் சில மனக்கசப்புகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டி வரலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், அபூர்வ சந்திப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும், போசன சுகமுண்டு.

வளவன்

# யாழ்.பொதுநூலகம் அதிசிறந்த நூலகமாக மீண்டும் தெரிவாகியது



(யாழ்ப்பாணம்)

யாழ்.நூலகம் தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினால் அதிசிறந்த நூலகமாக இம்மாதம் முதல் மீண்டும் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலகமாகவும் யாழ்.பொதுநூலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆசியாவில் மிகச் சிறந்த நூலகமாக திகழ்ந்த யாழ்.நூலகம் 1981 ஆம் ஆண்டு எரிக்கப்பட்டது. அதற்கு முன்னர் அதிசிறந்த நூலகமாக யாழ்.நூலகம் காணப்பட்டது.

1981 ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் குண்டர்களினால் அந்நூலகம் எரிக்கப்பட்டது.

பின்னர் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக நூலகத்தை சிறப்பாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது இந்த நூலகத்தை சிறப்பாக கட்டியெழுப்ப அரசாங்கம் சகல விதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

இந்த நூலகம் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பியுள்ளதை தற்பொழுது அவதானிக்க முடிகிறது. (அ-2)




நன்றி:-மிரர்

# புனிதர்களின் போரில் இருபோட்டிகள் சமநிலையில் முடிவடைந்தன

(மானிப்பாய்)

**புனிதர்களின் போர்** என அழைக்கப்படும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் வருடாந்தம் இடம்பெற்றுவரும் உதைபந்தாட்ட போட்டிகள் நேற்றுமுன்தினம் நண்பகல் முதல் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

போட்டிகளில் இரு கல்லூரியையும் சேர்ந்த 14,16,18,20 வயதுப் பிரிவு அணிகள் மோதிக் கொண்டன.

இவற்றில் 2 போட்டிகளில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் 2 போட்டிகளில் யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரியும் வெற்றியை தமதாக்கிக் கொண்டன.

14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 1:0 என்னும் கோல் கணக்கில் புனித பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 1:0 என்னும் கோல் கணக்கில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 3:1 என்னும் கோல் கணக்கில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி அபாரமாக வெற்றியீட்டியது.

20 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் 3:0 என்னும் கோல் கணக்கில் புனித பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

அத்தோடு, போட்டிகளின் போது முன்னணி வீரர்கள் பலர் உபாதை காரணமாக தொடர்ந்து விளையாட முடியாது வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

# உரும்பிராய் வேம்பன் ஒழுங்கையில் திருட்டு

## சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வேம்பன் ஒழுங்கைப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் பெறுமதியான உபகரணங்கள், தங்க நகைகள், ஒரு தொகைப் பணம் என்பனவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.




வீட்டார் தூக்கத்திலிருந்த வேளை வீட்டின் ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 10 பவுண் தங்க நகைகள், 80 ஆயிரம் ரூபா பணம், பெறுமதி மிக்க இலத்திரனியல் உபகரணங்கள் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டார் மறுநாள் காலை ஜன்னல் உடைத்திருப்பதையடுத்து பொருட்களைப் பார்த்த போதே அவை திருடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து வீட்டு உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மோப்ப நாய்கள் சகிதம் அவ்விடத்திற்கு வந்த பொலிஸார், சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். (அ-9)






யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் வட மாகாணத்தில் காணியுரிமையும் பெண்களும் என்ற நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்.கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் யாழ்.மாவட்ட தலைவி சரோஜா சிவச்சந்திரன் எழுதிய இந்நூலை வடமாகாண காணி உதவி ஆணையாளர் கே.மகேஸ்வரன் நூலை வெளியிட்டு வைப்பதையும் நூலாசிரியர் அதனை பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

# சமூக சேவைக்கு கௌரவிப்பு

(மானிப்பாய்)

சமூக சேவைகளில் ஈடுபட்டு வரும் வட்டுக்கோட்டை மூளாய் பகுதியைச் சேர்ந்த கலக் விஸ்வநாதன் தம்பதியர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக் கௌரவிப்பு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரியான கலக் விஸ்நாதன் சமாதான நீதவான் என்பதுடன், வட்டுக்கோட்டை கண்ணலிங் கேஸ்வரர் ஆலய பரிபாலன சபைத் தலைவ ராகவுமுள்ளார்.

அதுமட்டுமன்றி அவர் இணக்க சபையின் உறுப்பினராக இருப்பதுடன், ஆங்கிலம், சிங்களம் உள்ளிட்ட பாடங்களை இலவசமாக போதிப்பதுடன் பல்வேறு சமூகப் பாங்கான செயற்றிட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றார். இதன் காரணமாகவே இவர் கௌரவிக் கப்படவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-9-23)

# யாழில் இந்திய வியாபாரிகள் தடைசெய்யப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இந்திய வியாபாரிகளை யாழ்ப்பாணத்தில் தடை செய்யுமாறு சாவகச்சேரி வர்த்தகர்கள் வடமாகாண மீன்பிடி, வர்த்தக வாணிப அமைச்சர் பா. டெனீஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சந்திப்பு கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி அமரர் நமசிவாயம் நினைவு மண்டபத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பின் போதே பண்டிகைக் காலத்தில் யாழ்.வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரிடமும் மாகாண சபை உறுப்பினர் க.விந்தனிடமும் கூறியிருந்தனர்.

இந்திய வியாபாரிகள் பிரதேச சபைகளில் அனுமதி பெறாது சட்டவிரோத புடைவை வியாபாரத்தில் ஈடுபடுவதனால் தாம் நட்டமடைவதாகவும் உள்ளூர் வர்த்தகர்கள் கூறியிருந்தனர்.



இச்சந்திப்பை தலைமை தாங்கி நடத்திய சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவிக்கையில்,

எமது வியாபாரம் கடந்த ஏழு மாதகாலமாக பாரிய பின்னடைவை கண்டுள்ளது எனவும் இந்நிலையில் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பண்டிகைக்கால நடை வியாபாரிகள் இங்கு வந்து தமது வியாபாரத்தை நடத்துவதனால் இங்கு சொந்தமாக வியாபாரம் செய்யும் சாவகச்சேரி வர்த்தகர்கள் மேலும் பாதிக்கப்படுகின்றார்கள் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். (அ-4)

# தென்னிலங்கை வியாபாரிகளால் பண்டிகைக்கால வியாபாரம் பாழ்

## யாழ்.புடைவை வியாபாரிகள் குமுறல்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை வியாபாரிகளினால் தமது கடைகளை மூட வேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளதாக யாழ்.புடைவைக்கடை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

பண்டிகைக் காலங்களில் தென்னிலங்கை புடைவை வியாபாரிகள் வடக்கிற்கு பெருமளவில் வந்து யாழ்.மாநகர சபையின் அனுமதியுடன் இங்கு வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

இதனைவிட ஆங்காங்கே சந்திகள், உள் வீதிகள், வாகனங்கள் போன்ற இடங்களில் வைத்தே இவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர்.

நாம் காலம் காலமாக யாழ்.மாநகர சபைக்கு வரிப்பணம் செலுத்தி புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

ஆனால் பண்டிகைக் கால வியாபாரம் எனக் கூறிக்கொண்டு யாழிற்கு வந்து மாநகர சபைக்கு ஒரு தொகைப் பணத்தையும் செலுத்தி விட்டு அவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் எமது கடைகளின் வியாபாரம் ஸ்தம்பித நிலையில் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

சில வியாபாரிகள் தமது கடைகளை வியாபாரமின்மையால் இழுத்துப்பூட்டி விட்டும் சென்றுள்ளனர்.

எமது தொழிலே வியாபாரம் என்றான நிலையில் நாளாந்த வியாபாரமும் குறைந்த பண்டிகை வியாபாரமும் எம்மை கைவிட்டால் நாம் கடைகளை மூடி விட்டு வேறு தொழில் பார்க்க வேண்டியே ஏற்படும்.

ஆகவே இது விடயத்தில் உடனடியாக உரியவர்கள் கவனமெடுத்து செயற்படல் வேண்டும் என யாழ்.புடைவை வியாபாரிகள் கோரியுள்ளனர். (அ-4)

# மதுபோதையில் வாகனம் செலுத்தினால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

**மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளைக் கைது செய்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.**

மது போதையில் வாகனங்களை செலுத்துவதால் விபத்துக்கள் மற்றும் உயிர் இழப்புக்கள் அதிகரித்து வருகின்ற நிலையிலேயே அவற்றை கட்டுப்படுத்தும் பொருட்டு போதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளைக் கைதுசெய்வது தொடர்பில் விசேட நடவடிக்கைகளை முன்னெடுக்க வுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் போக்குவரத்து பொலிஸாருக்கு தேவையான அறிவுறுத்தல்களை பொலிஸ் திணைக்களம் வழங்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டு முழுவதிலும் மதுபோதையில் வாகனங்களை செலுத்திய 35 ஆயிரத்து 502 சாரதிகள் கைது செய்யப்பட்டு சட்டத்திற்கு முன்னர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் 2013 ஆம் ஆண்டும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலான ஒன்பது மாத காலப் பகுதிக்குள் மாத்திரம் இவ்வாறு மதுபோதையில் வாகனங்களை செலுத்திய 38 ஆயிரத்து 52 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மதுபோதையில் வாகனங்களை செலுத்துவோரின் எண்ணிக்கை இவ்வாண்டில் அதிகரித்துள்ள நிலையில் அவ்வாறான சாரதிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸ் திணைக்களம் வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

மது போதையுடன் வாகனம் செலுத்தும் சாரதி ஒருவருக்கும் 7 ஆயிரத்து 500 ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரை தண்டமும். மூன்று மாதத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு சாரதி அனுமதிப்பத்திரமும் இரத்துச் செய்யப்படும்.


மது போதையுடன் வாகனம் செலுத்தி காயம் ஏற்படுத்தினால் மேற்படி தண்டனைக்கு மேலதிகமாக கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

மது போதையில் வாகனத்தை செலுத்தி மரணத்தை ஏற்படுத்தினால் மேற்படி தண்டனைகளுக்கு மேலதிகமாக 5 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப் படும் என்றும் பொலிஸ் திணைக்களம் தெரிவிக்கிறது.

(அ-2)


அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013
சித்தியடைந்த மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு
எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா ,கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இயக்குநர்
(சி/5315)



இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்
5 Chapel Road, West Ealing, Middlesex, W13 9AE
Charity No - 1014409
Email: info@ammanealing.org Tel: 0044 208 8100 835
Web: www.ammanealing.org Fax: 0044 208 8400 485
எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

பணிநிலை : 1 ஆலய சிவாச்சாரியார்
Hindu religious workers with non pastoral role
தகமைகள் : விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும். இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.
கடமைகள் : ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.
வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி : 21.11.2013
பணிநிலை : 2 நாதஸ்வர, தவில் கலைஞர்கள்
Hindu Religious (Musicians) workers
தகமைகள் : நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்.
கடமைகள் : ஆலய பூசைக்காலங்களில் மங்கள இசை இசைத்தல்.
வேதனம் : பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.
விண்ணப்ப முடிவு திகதி : 21.11.2013
ஆலய இணையத்தளத்தில் (www.ammanealing.org) பணிநிலை வேண்டுகைக்கான விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது. விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி, பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம்.
(4395)



புதிய பிரிவு ஆரம்பம்
2013இல் 86 சதவீத சித்திகளுடன்
வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவின்
2014 தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு
புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
வாராந்தம் வெற்றித்தேர்வுப் பரீட்சைகளுடன் விசேட அலகுப் பரீட்சைகளும் சுயகற்றலுக்கான விசேட கையேடுகளும்,
வாரத்தில் மூன்று தினங்கள் மட்டுமே
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின்
சிறப்பான வழிகாட்டலில்
ஆரம்பம்: 01.11.2013 பி.ப 4.00 மணி
இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக)
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



ஆங்கிலப் பயிற்சிநெறி ஆரம்பம்
அநேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத்
தோற்றிய மாணவர்களுக்கான
யாழ். முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்
4 மாதகால விசேட ஆங்கிலப் பயிற்சிநெறி
ஆரம்பமாகிறது.
Spoken English with Grammar
ஆரம்பம்: 01.11.2013 வெள்ளி பி.ப 4.00 மணி
இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக)
தரம் 6இல் ஆங்கிலமொழி மூலம் கற்கவிருக்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். 100 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அனுமதிக்கு முந்துங்கள். முற்கூட்டியே பதிவுசெய்து விசேட கையேட்டினையும் நேர அட்டவணையையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>உயரம்: 5'8"<br>கி.பா: 39<br>தகைமை/தொழில்: A/L, மருத்துவம் (பிரான்ஸ் Not- PR)<br>தொ.இ: B -1502 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா: 44<br>தகைமை/ தொழில்: Dr (MBBS)<br>தொ.இ: G -1538 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>உயரம்: 5'8"<br>கி.பா: 31<br>தகைமை/தொழில்: MA (புனர்வாழ்வு அமைச்சு)<br>தொ.இ: B -1519 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்: 5'3"<br>கி.பா: 32<br>தகைமை/ தொழில்: கல்வியியற் கல்லூரி பட்டதாரி ஆசிரியை<br>தொ.இ: G-1543 |
| பிறப்பு: 1983 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 6'<br>தகைமை/ தொழில்: A/L (UK PR)<br>தொ.இ: B -1520 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>உயரம்: 5'5"<br>கி.பா: 32.25<br>தகைமை/ தொழில்: A/L (முகாமைத்துவ உதவியாளர்)<br>தொ.இ: G -1545 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'4"<br>கி.பா: 65.75, 2 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L (அதிதீவிர சிகிச்சைப் பிரிவு)<br>தொ.இ: B -1523 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 120.25, 1இல் செவ்<br>தகைமை/ தொழில்: BA, MA ஆசிரியை<br>தொ.இ: G -1547 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கும் மு/தண்ணீரூற்று சீ.சீ.த.க. பாடசாலை.

(முல்லைத்தீவு)

**மு/தண்ணீரூற்று சீ.சீ. தமிழ்க்கலவன் பாடசாலை பல வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதாக பாடசாலை மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.**



இப்பாடசாலை கடந்த 1896 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கணுக்கேணி மேற்கு கிராமத்தில் உருவாக்கப்பட்டது.

போர்க்காலத்தில் இயங்காதிருந்து கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துடன் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இங்கு தரம் 1-5 வரை வகுப்புக்கள் மூன்று மாதங்களையும் சேர்ந்த 97 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இங்கு கிறிஸ்தவ பாடத்துக்கு நிரந்தர ஆசிரியர் எவரும் இல்லை.

விளையாட்டு முற்றம், விளையாட்டு உபகரணங்கள் என்பனவும் போதாதுள்ளன.

கற்றல் உபகரணங்கள், கற்றல் செயற்பாட்டறை, கலையரங்கவசதி இல்லை. பாடசாலை பொருட்களை பாதுகாப்பதற்கான களஞ்சிய அறை, உணவு களஞ்சிய அறை என்பனவும் தேநீர்ச்சாலையும் அமைக்கப்படவில்லை.

பாடசாலைக்கென வாகன தரிப்பிட வசதியும் அரச தனியார் பேருந்து சேவை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுப்படவில்லை .

மேலும் அதிபர், ஆசிரியர்களுக்கான விடுதி வசதி, ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை என்பனவும் கிடையாது. ஆசிரியர்களுக்கான தளபாட வசதி உள்ள போதிலும் பற்றாக்குறை உள்ளது.

விளையாட்டு மைதானத்தின் பரப்பளவு மாணவர் விளையாட்டு திறன்களை விருத்தி செய்ய போதாதுள்ளது. பாடசாலைக்கு தொலைபேசி ,நிழற்பிரதி இயந்திரம் என்பன தேவையாகும்.

இங்கு அதிபர் ஒருவரைத் தவிர ஏனையவர்கள் பெண் ஆசிரியர்களே கடமையில் உள்ளனர். ஆண் ஆசிரியர்களும் நியமனம் செய்யப்படல் வேண்டும்.

இப்பாடசாலையில் நிலவும் பல்வகைப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவ வேண்டுமென மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-264)




## மீன்பிடி அமைச்சுக்கு இணைப்பாளர் தெரிவு

(குருமன்காடு)

கடந்த மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பில் டெலோ சார்பில் 9 ஆம் இலக்கத்தில் போட்டியிட்ட செந்தில்நாதன் மயூரன் 10 ஆயிரத்து ஏழு விருப்பு வாக்குகளைப் பெற்று 5 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும் மாகாணசபைக்கு தெரிவுசெய்யப்படவில்லை.

இந்நிலையில் இவர் வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைப்பாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், வடமாகாண சபைத் தேர்தலில் சொற்ப வாக்குகளால் வெற்றி கைநழுவியபோதிலும் தற்போது எனக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சின் இணைப்பாளர் பதவி மூலம் இப் பிரதேச மக்களுக்கு என்னால் முடிந்தவரை சேவை செய்ய தயாராகவுள்ளேன்.

மேலும்5 முதல்10 பேர்கொண்ட ஓர்குழுவை அமைப்பதன் மூலம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு கிராமம் வீதம் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றை தீர்த்துவைப்பதற்கான நடவடிக் கைகளை எடுக்க திட்டமிட்டுள்ளேன் என கூறினார். (ம-250)

## உதைபந்தாட்டப் போட்டியில் சிவபுரம் ஏ அணி வெற்றியீட்டியது

(கண்டாவளை)

Y.M.C.A. நிறுவனத்தின் அனுசரணையுடன் விளையாட்டு ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு ஆறு அணிகள் பங்குபற்றிய உதைபந்தாட்டப்போட்டியில் சிவபுரம் A அணி வெற்றி பெற்று சம்பியனாகியுள்ளது.

இதில் கோரக்கன்கட்டு A,B அணிகள் சிவபுர A,B அணிகள், திருவையாறு A,B அணிகள் போட்டியில் பங்குபற்றி இறுதிப் போட்டிக்கு கோரக்கன்கட்டு A அணியும் சிவபுரம்A அணியும் தெரிவாகியுள்ளன.

இறுதிப்போட்டியில் கோரக்கன்கட்டு A அணியை எதிர்த்து சிவபுரம் A அணி மோதியது.

இதில் இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்டமையால் பனால்டி உதைமூலம் சிவபுரம் A அணி வெற்றியீட்டியது.

இதில் சிறந்த விளையாட்டு வீரராக சிவபுரம் A அணியை சேர்ந்த கபிலன் தெரிவு செய்யப்பட்டார். (ம-263)

## பிக்கப் வாகனம் மோதியதில் மாணவர்கள் இருவர் படுகாயம்

வீதியைக் கடக்க முற்பட்ட இருபாடசாலை மாணவர்களை கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையின் பிக்கப் வாகனம் மோதியதில் குறித்த இரு மாணவர்களும் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்னால் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் குறித்து தெரியவருவது, குறித்த மாணவர்கள் இருவரும் பாடசாலை முடிவடைந்து வீடு செல்வதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட வேளை பிக்கப் வாகனம் மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் பெரிய பரந்தனைச் சேர்ந்த செல்வராஜா புகழ் அன்பன் (வயது 12), ஏ-9 கரடிப்போக்கைச் சேர்ந்த இராமமூர்த்தி செந்தாளன் (வயது 16) என்ற கிளி/கனிஷ்ட மகா வித்தியாலய மாணவர்களே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களாவர்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-259)

## கலாசார மத்திய நிலைய கட்டுமானப் பணிகள் துரிதகதியில்

(பூந்தோட்டம்)

கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிற்கான கலாசார மத்திய நிலையம் ஓமந்தை வேப்பங்குளத்தில் துரிதகதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது என வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஓமந்தை வேப்பங்குளத்தில் அமைந்துள்ள அரசாங்க ஊழியர் வீட்டுத்திட்டத்தில் மேற்படி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், கட்டட நிர்மாணப்பணிகளும் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு நாட்டிலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுதோறும் பிரதேச கலாசார மத்திய நிலையங்களை நிறுவி கலை சம்பந்தமான பயிற்சிகளை வழங்குவதுடன் கலை விழாக்களையும் நடத்தி வருகின்றது.

அந்த வகையில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிற்கான கலாசார மத்திய நிலையத்தை ஓமந்தை வேப்பங்குளத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம். கே. பந்துல ஹரிஸ்சந்திரவின் ஆலோசனையிலும், வழிப்படுத்தலிலும் குறித்த கலாசார மத்திய நிலையத்தினை சிறந்த முறையில் கட்டிமுடிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா தெரிவித்தார். (ம-266)








பண்டாரவன்னியனின் 202 ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்ட போது பண்டாரவன்னியனின் சிலைக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி. மலர்மாலை அணிவிப்பதையும் கலை நிகழ்வையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- குருமன்காடு,பூந்தோட்டம் செய்தியாளர்கள்)

# வெளிநாட்டு தலைவர்களின் வடக்கு விஜயம் வரவேற்கப்பட வேண்டியது

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**பிரித்தானிய பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் வரவேற்கப்பட வேண்டியது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

எவ்வாறெனினும், இலங்கைக்கு எதிராக சர்வதேச யுத்தக்குற்றச் செயல் விசாரணைகளை வலியுறுத்தி நிற்கும் தரப்பினர், பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் யாழ்ப்பாண விஜயத்தை தவறாக பயன்படுத்திக்கொள்ளக் கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் தவறான தகவல்களை வெளியிடுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை புலி ஆதரவு தரப்பும், மனித உரிமை அமைப்புக்களும் பயன்படுத்திகொள்ளக் கூடும். பிரதமர் கமரூன் யாழ்ப்பாணத்திற்கு மட்டுமன்றி வன்னியின் எந்தவொரு பகுதிக்கும் விஜயம் செய்ய முடியும் எனவும், அதனை வரவேற்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை உள்ளிட்ட பல முக்கிய வெளிநாட்டுத் தலைவர்கள் அண்மையில் யுத்த வலயத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

இவ்வாறான வெளிநாட்டுத் தலைவர்களின் வடக்கு கிழக்கு விஜயம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தரப்பினரதும் ஊடகங்களினதும் போலிப் பிரசாரங்களை முறியடிக்க பாரியளவில் உதவும். அத்துடன் உண்மையான கள நிலவரங்களை மக்கள் புரிந்து கொள்ளவும் வழியமைக்கும்.

முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு எவ்வாறு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை அனைத்து தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு ஊடகங்கள் இதனை கவனிக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். வெளிநாட்டுத் தலைவர்கள் வடக்கின் கள நிலமைகளை நேரில் பார்வையிடுவது மிகவும் சிறந்த விடயம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## மோதகங்களுக்குள் கஞ்சா போதைப்பொருள்

(கம்பளை)

கம்பளை நகரில் கஞ்சா போதைப்பொருள் கலந்த மோதகங்களை விற்பனை செய்த வர்த்தகர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை நகரிலுள்ள ஆயுர்வேத மருத்துவ விற்பனை நிலையங்களில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே கஞ்சா போதைப்பொருள் கலந்த மோதக உருண்டைகள் விற்பனையாவதை கண்டு பிடித்தனர்.

இதனையடுத்து குறித்த விற்பனை நிலையங்களிலிருந்து கஞ்சா போதைப்பொருள் கலந்த 225 மோதக உருண்டைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையும் எடுத்துள்ளனர். (அ-2)

## குரு பாதுகா பூஜை வழிபாடு


(யாழ்ப்பாணம்)

குருபாதுகா பூஜை வழிபாடும் பஜன் தியான நிகழ்வுகளும் இல. 9 , செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷன் யாழ். கிளையில் பிரதி வியாழக்கிழமை தோறும் மாலை 5 மணி தொடக்கம் 6.30 மணிவரை நடைபெற்று வருகின்றன.

இவ்வகுப்புக்களில் மன அமைதி, மன வலிமை, ஞாபக சக்தி ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான மந்திர உச்சாடனத்துடன் பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வகுப்புக்களில் வயது வேறுபாடின்றி இருபாலாரும் பங்கு பற்றலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 222 3447, 077 9104939 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். (அ-7)

## 31 ஆம் நாள் நினைவு நாளுடன் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 03.10.2013 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த

**அமரர் திரு.கந்தையா பரமலிங்கம்**

அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 01.11.2013 வெள்ளிக்கிழமை கீரிமலையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 02.11.2011 சனிக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

காயத்திரி வெதுப்பகம்,
வற்றாப்பளை, முள்ளியவளை. (4392) குடும்பத்தினர்.


சந்துரு இசைக்குழுவின் இசையுடன்

சுடர் தீபாவளி கொண்டாட்டம்

கார்த்திகை 01ம் திகதி

யாழ்.பிரதான பஸ் நிலையத்திற்கு அருகாமையில்

மாலை 04 மணி முதல் இரவு 09 மணி வரை

இணை அனுசரணைகள் :-

ஹரிகணன் பிரின்டேர்ஸ்
சங்கீதா AGENT
தாயகம் வைத்தியசாலை
இஷாரா பெஷன்
ஆச்சி HOT FOOD
மயில் அழகுக்கலை & போட்டோ
அருள் குளோபல் EXPRESS
GRAND HOTEL
வரதன் லேனர்ஸ்
E.S.P.நாகரட்ணம்



அனுமதி இலவசம்

Fm சுடர்
தமிழ் நெஞ்சங்களின் இதயகீதம்

வாருங்கள் சுடரோடு தீபாவளி கொண்டாடுங்கள்

www.sudarfm.com




# காணாமல் போன பூனைக்குட்டி!

...பூனைக் குட்டி ஓரளவு பழகிவிட்டது. ஆதலால் வீட்டின் தாழ்வாரம், முன்பக்கம், வீட்டுத்தோட்டம் என்று சுற்றி வரும். இடையில் தாத்தா அதற்குக் கிண்ணத்தில் பால் ஊற்றி வைப்பார். குடித்து விட்டுச் சுற்றி வரும். கவலை இல்லாமல் கலை பள்ளிக்குச் சென்று வருவாள்.

அன்று வெள்ளிக்கிழமை, தாத்தா காலையிலேயே கிளம்பி அவரது நண்பரின் வீட்டு நிகழ்ச்சி ஒன்றிற்காகப் பக்கத்து ஊருக்குப் போய்விட்டார். கலைக்குப் பூனைக்குட்டியைத் தனியே விட்டுச் செல்வதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. வேறு என்ன செய்ய முடியும்? அதற்கு டாடா காட்டிவிட்டு கலை பள்ளிக்குப் புறப்பட்டாள். பூனைக்குட்டியும் அதனை ஏற்றுக்கொள்வதைப்போல் மிஞ்ஞா என்று குரல் கொடுத்தது.

மாலை பள்ளி முடிந்தவுடன் வேகவேகமாகக் கலை வீட்டிற்கு வந்தாள். வெளிக் கேட்டைத் திறந்தாள். வழக்கமாக வெளி கேட்டைத் திறக்கும் கிரீச் சத்தம் கேட்டால், குரல் கொடத்துக் கொண்டு பூனைக்குட்டி வந்துவிடும். அன்று அது வரக் காணோம்.

கண்மணி.... கண்மணி.... என்று குரல் கொடுத்தாள். ஒரு சத்தமும் இல்லை. எங்கும் அமைதி.

வீடு பூட்டியிருந்தது. வழக்கம்போல் அம்மா கோவிலுக்குப் போயிருப்பாள். சாவியைத் தாழ்வாரத்தில் மேலே ஒரு கட்டையில் வைத்திருப்பாள். அதை எடுத்துக் கதவைத் திறக்கக்கூடத் தோன்றவில்லை.

கலை பையைத் திண்ணையிலே வைத்துவிட்டு வீட்டுத் தோட்டம் முழுக்கத் தேடிப் பார்த்தாள். கூப்பிட்டு களைத்துவிட்டாள்.

பூனையைக் காணோம். அழுகை அழுகையாய் வந்தது. சோர்ந்துபோய் திண்ணையில் அமர்ந்துவிட்டாள்.

கண்ணன் வந்தான். கலையைப் பார்க்கப் பாவமாக இருந்தது. என்ன கலை இப்படி இருக்க? என்று கேட்டான்.

கலை, அண்ணா, பூனைக் குட்டியைக் காணோம் என்று கூறினாள். அவளது கணிகளிலிருந்து நீர் ததும்பியது. தங்கையைப் பார்க்க பாவமாக இருந்தது.



என்ன கலை இதுக்கா அழுகிற! உன் பூனைக்குட்டி எங்கும் போயிருக்காது. நான் தேடிப் பார்க்கிறேன் என்று கூறிவிட்டு வீட்டைச் சுற்றித் தேடிப்பார்த்தான். காணோம்.

ஒருவேளை வெளியில போயிருக்குமோ என்று தெருவுக்குச்சென்று தேடிப்பார்த்தான். அங்கும் இல்லை.

இரண்டு பேரும் திண்ணையிலேயே அமர்ந்திருந்தனர். வெளியூர் போன தாத்தா வந்தார். பேரனும் பேத்தியும் சோர்ந்துபோய் திண்ணையில அமர்ந்திருப்பதைப் பார்த்தான்.

என்ன கலை, ஏன் கன்னத்தில கைவச்சு உக்காந்திருக்க? என்று கேட்டார். கலையால பேசக்கூட முடியல. தேக்கி வைத்திருந்த சோகம் வெடித்துக்கொண்டு வெளிவந்தது. தாத்தாவை அணைத்து தேம்பித் தேம்பி அழுதாள். கண்ணன் நடந்ததைச்சொன்னான்.

அடடா, பூனைக்குட்டியைக் காணோமா? சின்னக் குட்டியில்ல. பாவம். எங்க போயிருக்கும்? ஆளில்லா வீட்டில பூனைக்குட்டி கத்துறதைப் பார்த்து யாராவது புடிச்சுட்டுப் போயிருப்பாங்க. இங்கேயிருந்தா நம்ம பேச்சுக் குரலக் கேட்டு ஓடிவந்திருக்குமே என்று தாத்தா தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். அவரும் பேரன் பேத்திகளோட திண்ணையில் அமர்ந்துவிட்டார்.

அம்மா மட்டும் வீட்டுக்குள்ள பூனையைச் சேர்ந்திருந்தா இப்படி காணாமப் போயிருக்குமா என்று கண்ணன் கேட்டான்.

ம்.... என்றாள் கலை.

சாமி கும்பிட்டு தேங்காய் பழக்கூடையோட அம்மா வந்தாள். விபூதியை எடுத்து நீட்டினாள். தாத்தா விபூதியை எடுத்து பூசிக்கொண்டு இருவருக்கும் பூசிவிட்டார்.

என்ன வீட்டுக் கதவைக் கூடத் திறக்காம திண்ணையிலயே இருந்துட்டீங்க என்று கேட்டுக்கொண்டு அம்மா சாவியை எடுத்து வீட்டைத் திறந்தாள்.

அம்மா நம்ம கலையோட பூனைக்குட்டியக் காணோம் என்றான் கண்ணன்.

பூனைக்குட்டிய அநாதையா வீட்டுக்கு வெளியே விட்டுட்டுப்போனா எப்படி இருக்கும்? அதான் பத்திரமா இருக்கட்டும்னு நான்தான் பூனைக்குட்டிய வீட்டுக்குள்ள விட்டுப் பூட்டிட்டுப் போனன் என்றாள் அம்மா.

கதவைத் திறக்கும் சத்தம் கேட்டு மிஞ்ஞா என்று குரல் கொடுத்துக்கொண்டே பூனை வெளியே வந்தது.

கண்மணிக்குட்டி....... என்று பூனைக்குட்டியை எடுத்துக்கொண்டு அம்மா.... என் செல்ல அம்மா... நன்றிம்மா.... என்று அம்மாவுக்கு தன் அன்பை வெளிப்படுத்தினாள் கலை.

எல்லோர் முகத்திலும் மகழ்ச்சி. பூனைக்குட்டி கலை தூக்கியவுடன் உற்சாகமாக இருந்தது.

அம்மாவின் அன்பு உள்ளத்தைப் புரிந்து கொண்ட கலை , அம்மாவைக் கட்டிக் கொண்டாள். பூனைக்குட்டியும் தன்து நன்றியைக் காட்ட அம்மாவின் பாதங்களைப் பற்றிக்கொண்டது. (முற்றும்)




- 1520- தென் அமெரிக்காவில் மகலன் நீரிணை மகலனால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1592-கொரியக் கடற்படையினர் பூசான் என்ற இடத்தில் மிகப்பெரும் ஜப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1604-ஷேக்ஸ்பியரின் ஓத்தெல்லோ நாடகம் முதற்தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- 1611-ஷேக்ஸ்பியரின் த டெம்பெஸ்ட் நாடகம் முதற்தடவையாக லண்டனில் அரங்கேறியது.
- 1755- போர்த்துக்கல், லிஸ்பன் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை காணரமாக 60 ஆயிரம் பேர் தொடக்கம் 90 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.
- 1805-முதலாம் நெப்போலியன் ஆஸ்திரியாவை முற்றுகையிட்டான்.
- 1814-நெப்போலியனின் பிரான்ஸ் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து ஐரோப்பாவின் எல்லைகளை மீளவரையும் பொருட்டு வியென்னா காங்கிரஸ் கூடியது.
- 1876- நியூசிலாந்து மாகாண சபைகள் கலைக்கப்பட்டன.
- 1894-ரஷ்யாவின் மூன்றாம் அலெக்சாண்டர் இறந்ததை அடுத்து இரண்டாம் நிக்கலாஸ் மன்னனானான்.
- 1904- இலங்கையின் வட மாகாணத்துக்கான தொடருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது. இது அநுராதபும் வரை சேவையில் ஈடுபட்டது.
- 1911-இத்தாலிக்கும் துருக்கிக்கும் இடையில் இடம்பெற்ற போரில் முதற்தடவையாக விமானத்தில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன.
- 1914- முதலாம் உலகப்போர்: சிலியில் ஜெர்மனியக் கடற்படையுடன் நடந்த மோதலில் பிரித்தானியக் கடற்படையினர் முதன்முதலில் தோல்வியடைந்தனர்.
- 1918-மேற்கு உக்ரேன் ஆஸ்திரிய- ஹங்கேரியப் பேரரசிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1922- ஒட்டோமன் பேரரசின் கடைசி சுல்தான் ஆறாம் மொஹமட் பதவியிழந்தான்.
- 1928- துருக்கிய மொழி சீர்திருத்தம் ஏற்பட்டது.
- 1915- நெவாடாவில் அணுகுண்டு வெடிப்புச் சோதனையில் அமெரிக்கப் படைகள் ஈடுபடுத்தப்பட்டனர்.
- 1956-புதுச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று இந்தியாவுடன் இணைந்தது.
- 1956-நிசாம் என அழைக்கப்பட்ட பகுதி ஆந்திரப் பிரதேசம் என்ற மாநிலமாக்கப்பட்டது.
- 1956-இந்தியாவில் மைசூர், கேரளம், மதராஸ் ஆகிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.
- 1956- இந்தியாவில் கன்னியாகுமரி பிரதேசம் கேரள மாநிலத்தில் இருந்து பிரிந்து தமிழ் நாடுமாநிலத்துடன் புதிய மாவட்டமாக இணைந்தது.
- 1957-அக்காலத்தில் உலகின் மிக நீளமான தொங்கு பாலமான மக்கினா பாலம மிச்சிகன் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.
- 1973-மைசூர் மாநிலம் கர்நாடகா என மாற்றப்பட்டது.
- 1981- ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து அன்டிகுவா பர்புடா விடுதலை பெற்றது.
- 1993- ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பதற்கான மாஸ்ரிக்ட் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.
- 1998- மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- 2006- பெங்களூர் நகரின் பெயர் பெங்களூரு என மாற்றப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1762-ஸ்பென்சர் பேர்சிவல், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் (இ.1812)

### இறப்புக்கள்

- 1959-தியாகராஜ பாகவதர், தமிழ்த் திரைப்பட நடிகர் பாடகர் (பி.1910)
- 1996- ஜுனியஸ் ரிச்சட் ஜயவர்தனா, இலங்கையின் முதலாவது ஜனாதிபதி (பி.1906)

### ஜே.ஆர். ஜெயவர்தன



ஜுனியஸ் ரிச்சட் ஜெயவர்தன 1906 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 17 ஆம் திகதி பிறந்தார். இவர் இலங்கையின் இரண்டாவது ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதியுமாவார்.

இவர் பெயரின் சுருக்கமான ஜே.ஆர். என பிரபலமாக அறியப்பட்டார். இவர் ஜனாதிபதி பதவியை ஏற்கும் முன்னர் அரசியலில் பல பதவிகளை வகித்தவர்.

இவர் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு அதன் தலைவராகவும் செயலாற்றினார்.

ஜே.ஆர். 1996 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி மரணமடைந்தார்.

# சகிப்புத்தன்மையும் அவசியம்



ஆன்மீகம் 24

நீங்கள் ஒருவரை அரை மனதாக நேசித்தால் அன்பைப் பற்றி எப்போதும் தெரிந்துகொள்ள மாட்டீர்கள்: அன்பு என்பது எப்போதும் இரண்டு நிலையில் மட்டுமே இருக்க முடியும். ஒன்று 100 சதவீதம். இன்னொன்று அன்பற்ற நிலை. நீங்கள் யாரையாவது 99 சதவீதம் மட்டும் நேசிக்க முடியுமா? அப்படியென்றால் உங்களுக்கு அன்பைப் பற்றியே தெரியவில்லை. அனைத்து விடயங்களும் இதேபோல்தான். செயல் என்று வரும்போதுகூட இப்படித்தான். ஒரு செயலை 100 சதவீதம் ஈடுபாட்டோடு செய்ய முடியவில்லை என்றால் அந்த செயல் அர்த்தமில்லாததாகிவிடும். அதற்குப் பதிலாக நீங்கள் அந்தச் செயலை செய்யாமலே விட்டுவிடலாம். ஒரு செயலை 100 சதவீத ஈடுபாடு இல்லா மல் நீங்கள் செய்யும்போது உங்களுக்கு பெரிதாக அதிலிருந்து ஒன்றும் கிடைத்துவிடாது. வேண்டுமானால் உங்கள் பிழைப்பிற்கு அது வழி செய்ய லாம். மற்றபடி வேறெந்த மாற்றமும் உங்களுக்கு நிகழாது. ஒரு செயலை நீங்கள் 100 சதவீத ஈடுபாட்டோடு செய்யவில்லையென்றால் அந்தச் செயல் உங்களுக்கு எந்த மாற்றத்தையும் கொண்டு வராது.

மற்றோர் முக்கியமான, தேவையான விடயம், சகிப்புத்தன்மையை, ஏற்றுக்கொள்ளும் தன்மையை நாம் அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும். இதுநாள் வரை சகிப்புத்தன்மை என்னும் வார்த்தையை நான் சொன்னதில்லை. இதுவரை எங்கேயும் எந்த வகுப்பிலும் சகிப்புத்தன்மை என்ற வார்த்தையை நான் உச்சரித்ததேயில்லை. நான் அதை விரும்பவில்லை. சகிப்புத்தன்மையை நான் விரும்பவில்லை. சகிப்புத்தன்மையை விட ஏற்றுக்கொள்ளும் தன்மை மிகவும் உயர்ந்தது. ஆனால், ஏற்றுக் கொள்ளும் தன்மை ஒருவருக்கு வராவிட்டால் பிறகு நாம் அவருக்கு சகிப்புத்தன்மையை கற்றுத்தர வேண்டியிருக்கிறது.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

எல்லா மதங்களுமே உள்நோக்கிய ஒரு பயணமாகத் தொடங்கியவைதான் என்றாலும்கூட காலப்போக்கில் அவற்றின் நோக்கங்கள் சிதைக்கப்பட்டு- வெற்று நம்பிக்கைகளின் தொகுப்புக்களாக அவை மாறிவிட்டன.

மனித வாழ்க்கையின் அருமை குறித்து அத்தனை மதங்களும் பேசியிருந்தாலும், அதே மதங்களைக் காரணம் காட்டி, மனிதர்கள் ஒருவருக்கொருவர் உயிர்களை எடுக்கும் அளவிற்குப் போய்விட்டார்கள்.

இதற்கான அடிப்படைக் காரணத்தை யாரும் சரியாகக் கண்டுணரவில்லை.

## அடிப்படைக் காரணம் எது?



ஒரு மதத்துக்கும், மறு மதத்துக்கும் இடையில் இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள்.

ஆனால், அந்த இணக்கம் நீண்ட காலம் நீடிக்காமல் மீண்டும் மோதும் வெடிக்கிறது.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமே தங்கள் வாழ்வில் உணராதவற்றை மனிதர்கள் நம்புவதுதான்.

நிதர்சனத்தில் உள்ள அனைவருக்கும் எப்போதும் உண்மை என்பது ஒன்றுதான்.

நீங்கள் வைத்திருக்கும் சமய நம்பிக்கைகளுக்கும், எது சரி, எது தவறு என்று உங்களுக்குள்ளேயே நீங்கள் வைத்திருக்கும் முடிவுகளுக்கும் காரணம் நீங்கள் பார்க்காதவற்றையும் உணராதவற்றையும் நம்பத் துவங்கியதுதான்.

இதன் காரணமாகவே எல்லா மோதல்களும் ஏற்படுகின்றது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஒன்றிணைகிறார்களா புலம்பெயர் தமிழர்கள்?

இலங்கையில் தொடரப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் படைகளால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு யுத்த மீறல்கள் தொடர்பில் பொறுப்பளிக்க வேண்டும் எனக் கோருவதுடன் இலங்கை அரசாங்கம் மீது அழுத்தம் கொடுப்பதே தற்போது புலம்பெயர் தமிழ் சமூகத்தின் முக்கிய திட்டமாக காணப்படுகிறது.

**இவ்வாறு இன்ர பிறஷ் சேர்விஸ் ஊடகத்தில் சமூவெல் ஒக்ஃபோட் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முப்பதாண்டுகளுக்கு முன்னர் இலங்கையிலிருந்து புறப்பட்டு முதன்முதலாக நியூயோர்க்கிற்கு சென்றிருந்தமை தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமார் விபரித்தார்.

எனது நண்பர்கள் பிரித்தானியாவுக்குச் சென்றிருந்தனர். நான் அமெரிக்காவின் சட்ட உரிமைகள் தொடர்பாகக் கற்றுக்கொண்டு அவற்றை இலங்கைச் சட்டத்துடன் தொடர்புபடுத்தி நடைமுறைப்படுத்த விரும்பியதால் நியூயோர்க்கைத் தேர்ந்தெடுத்தேன். நான் நாட்டை விட்டுப் புறப்பட்டபோது இதுவே எனது குறிக்கோளாக இருந்தது. ஆனால், 1983 இல் இடம்பெற்ற கலவரம் எல்லாவற்றையும் மாற்றி விட்டது என உருத்திரகுமாரன் குறிப் பிட்டார்.

தற்போது உருத்திரகுமாரன் நீதிமன்றில் ஒரு சட்டவாளராக வாதிடுவதில்லை. இவர் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமராகப் பணியாற்றுகிறார். இவரது பணியகம் நியூயோர்க் நகரின் கார்மென்ர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவரது பணியகத்திற்கு முன்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் இலட்சியமாகக் காணப்பட்ட தமிழீழம் என்பது பொறிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மே 2009 இல் இலங்கை அரசாங்கப் படைகளால் தோற்கடிக்கப்படும் வரை உருத்திரகுமாரன் இந்த அமைப்பினதும் இதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனினதும் சட்ட ஆலோசகராகப் பணிபுரிந்தார்.

இலங்கையில் வாழும் பெரும்பான்மை சிங்கள் பௌத்த சமூகத்தால் காலங்காலமாக சிறுபான்மைத் தமிழ் சமூகத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் காரணமாகவே இலங்கைத் தீவில் யுத்தம் ஆரம்பமானது. 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், சிறுபான்மைத் தமிழ் சமூகமும் ஏனைய சிறுபான்மை சமூகங்களும் இலங்கையை ஆண்ட அரசாங்கங்களால் மொழி மற்றும் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். இலங்கையின் அனைத்து அரச செயல்களிலும் சிங்கள மொழி மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி 1957 இல் சிங்களம் மட்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது.

1983 இல் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலவரங்களை அடுத்து பல நூற்றுக்கண்க்கான தமிழ் மக்கள் இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் குடியேறினர். இதனைத் தொடர்ந்து இலங்கையில் உள்நாட்டுப் போர் மிகத் தீவிரம் பெற்றது. இதுவே விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழீழம் என்கின்ற தனிநாடு கோர வித்திட்டது.

விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்திற்கு புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த முப்பதாண்டுகளாக தமது ஆதரவை வழங்கினர். இந்த மக்களுக்கு அரசியல் உரிமைகள், சுயநிர்ணயம் போன்றன தொடர்பில் உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மக்கள் மிகத் தெளிவான கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை உருத்திரகுமாரன் ஏற்றுக் கொண்டார்.

இலங்கைத் தீவில் வன்முறையற்ற அமைதி வழிமூலம் அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் ஏனைய நாடுகளில் வாழும் இவர்களின் ஆதரவாளர்களும் மீளவும் சிந்திக்க வேண்டியேற்பட்டது.

செப்ரெம்பரில் ஐ.நா. பொதுச் சபையில் இலங்கை ஜனாதிபதி உரையாற்றுவதை எதிர்த்து ஐ.நாவுக்கு வெளியே தமிழ் மக்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் *தற்போதும் பிரபாகரன் தான் எமது தலைவர்* என்ற வாசகத்துடன் கூடிய பதாகைகளை தமது கைகளில் வைத்திருந்தனர்.

புலம்பெயர் தமிழ் மக்களின் அரசியலை விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டிருந்தனர்.



அதாவது புலம்பெயர் அரசியலை விடுதலைப்புலிகள் தமது இரும்புப் பிடிக்குள் கொண்டிருந்தனர் என இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற போது ஐ.நாவுக்கான பேச்சாளராகக் கடைமையாற்றிய கோர்டன் வொய்ஸ் குறிப்பிடுகிறார்.

தமிழ்ப் புலிகள் தமக்கான நிதியை பல்வேறு நாடுகளின் அரசாங்கங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் தமக்கான நிதியை அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் சமூகத்திடமிருந்து பெற்றுக் கொண்டனர். இந்த நாடுகளில் விடுதலைப்புலிகள் அமைப்பு முறைசாரா விதத்தில் வர்த்தகம் மற்றும் வருவாயை ஈட்டும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டுடன் தனது ஆதரவாளர்களைக் கொண்டு மிகப்பெரிய வலயமைப்பையும் உருவாக்கியது.

(தொடரும்)

# வழிபாட்டிடங்களில் புனிதத்தன்மை பேணுக; நல்லூர் பிரதேச செயலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வழிபாட்டிடங்களில் புனிதத்தன்மை பேணுதலும் பாதுகாத்தலும் என்னும் தலைப்பில் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தர்மகர்த்தா மற்றும் பரிபாலன சபையினருக்கு கடிதம் ஒன்றை பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் அனுப்பியுள்ளார்.**

அக்கடிதத்தில், வழிபாட்டுத் தலங்களில் களவு மற்றும் அசம்பாவிதங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மதநம்பிக்கை குறைவடைந்து வருவதும் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவோரது எண்ணிக்கை குறைவடைவதும் ஆலயச் சூழலில் களவு , கொலை உள்ளிட்ட பாதகச் செயல்கள். அதிகரித்து வருவதும் எல்லோரையும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பது கண்கூடு.

எனவே, ஆலயச் சூழலில் உள்ள வாகனத் தரிப்பிடங்கள், மடங்கள், கொட்டகைகளில் தவறான நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு ஏற்றதான மறைவிடங்கள் இருக்குமாயின் அவ்விடங்களை தொடர்ச்சியாக கண்காணிப்பதோடு ஆலயத்தின் புனிதத் தன்மைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் புனிதத் தன்மையை பேணுவதும் அவசியமாகும்.

உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இல்லாத நிலையிலிருக்கும் ஆலயங்களில் ஆலயத்தின் சொத்துக்களையும் உடைமைகளையும் சமயச்சின்னங்களையும் பாதுகாக்க உகந்த நடவடிக்கை எடுப்பதுடன் பெறுமதியான தங்க நகைகள், ஆபரணங்களை ஆலயத்தில் வைத்துப் பேணாது பிற பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதன் மூலம் விபரீதங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

அன்பு, அகிம்சை, மனித நேயம் உள்ளிட்ட பண்புகளை இளையவர்களுக்கு ஊட்டத்தக்க வகையில் ஆலயச் சூழலில் எப்போதும் புனிதத் தன்மை பேணி அறப்போதனைகள், சமய வகுப்புக்கள் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சமய விழுமியங்களைப் பாதுகாக்குமாறு அதில் கேட்கப்பட்டுள்ளது. (அ)

## நிர்வாகிகள் தெரிவு

கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையத்தின் வருடாந்த நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விபரம் வருமாறு,

இதன்படி சனசமூக நிலைய தலைவர் சி.சிவபாலசுந்தரம், செயலாளர் கு.தர்மேந்திரா, பொருளாளர் ஜெ.செந்தூரன், உபதலைவர் இ.செல்வராசா, உபசெயலாளர் ந.சிவராசா ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஐவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-5-17)

## பரிசளிப்புவிழா நேர மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யா/அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் அன்றையதினம் முற்பகல் 9.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (அ-5)

# வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற போவதில்லை

## ஜனாதிபதி திட்டவட்டம்

(கொழும்பு)

நாட்டில் உச்சகட்ட போர் நடந்து முடிவடைந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெற வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு தமிழர் அமைப்புகளும், சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களும் வற்புறுத்தி வருகின்றனர்.

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாணத்தில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று கூறிவருகிறார்.

நாட்டின் பாதுகாப்பு கருதியே வடக்கு மாகாணத்தில் இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து கூறி வந்தார்.

இந்நிலையில், தலைநகர் கொழும்பில் நடைபெற்ற இராணுவ வீரர்களுக்கான விருது வழங்கும் விழாவில் உரையாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை இராணுவம் வெற்றி கொண்ட பின்னரும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எனது அரசு போதிய நிவாரணத்தை வழங்கவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்தது.

அதனைத்தொடர்ந்து, வடக்கு மாகாணத்தில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெற வேண்டும் என்ற வற்புறுத்தலும் எழும்பியுள்ளது.

இது நடைமுறைக்கு சாத்தியமற்றது. இதை செய்யவும் முடியாது என்று திட்டவட்டமாக அவர் கூறினார். (அ-2)



செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் சுன்னாகக் கிளை 2 இல் காப்புறுதியை பெற்றிருந்த கர்ரை நகரைச் சேர்ந்த வாடிக்கையாளர் ஒருவரது மரண இழப்பீட்டுத் தொகைக்கான காசோலை அவரது மனைவியிடம் சுன்னாகக் கிளை 2 இன் முகாமையாளர் பா.பிறேம்நாத் கையளிக்கும் போது அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரிகளான பு.சுமன், ப.ஹரிச்சந்திர, சி.சஞ்ஜி மற்றும் விற்பனை ஆலோசகரான பா.கபிலன் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# மிருசுவில் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவு

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மிருசுவில் பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோரின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

*கட்டுரை-பிரிவு-1*

க.ஹனுகி (யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), யோ.வைஷ்ணவி (யா/உசன் இராமநாதன் ம.வி., சி.டிலக்ஷி (யா/உசன் இராமநாதன் ம.வி.)

*பிரிவு-2*

ஸ்ரீ.தனுசா (யா/உசன் இராமநாதன் ம.வி.), பீ.மேரிசிந்துஜா (யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை), சி.துர்க்கா (யா/உசன் இராமநாதன் ம.வி.,

*வாசிப்பு*

வி.பிரிந்துவி (யா/உசன் இராமநாதன் ம.வி., கு.தேனுசா (யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை), க.வர்சனா (யா/கரம்பகம் அ.த.க. பாடசாலை),

*பேச்சு*

ஜெ.றொ.அன்சன் (யா/உசன் இராமநாதன் ம.வி., ச.டிலானி (யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை), சி.சாகித்தியா (யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை),

*கதை கூறல்*

த.அனாஜிகா (யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை), டி.கயல்விழி (யா/கரம்பகம் அ.த.க. பாடசாலை), ல.சங்கவி (யா/உசன் இராமநாதன் ம.வி.

*சித்திரம்*

வ.நிதோயன் (யா/உசன் இராமநாதன் ம.வி., பே.கவியரசன் (யா/உசன் இராமநாதன் ம.வி., நிலட்சன் (யா/உசன் இராமநாதன் ம.வி.,

*பொதுஅறிவு*

ம.கேதாரணி, த.ஜீவிதா, த.யதுசோபன்

*சிறுகதை*

ச.நிறேகா (யா/உசன் இராமநாதன் ம.வி., ச.சுகந்தினி (யா/உசன் இராமநாதன் ம.வி., கு.தஷாயினி (யா/உசன் இராமநாதன் ம.வி.

ஆத்திசூடி, வர்ணம் தீட்டல் ஆகியவற்றில் பங்குபற்றிய அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்கும் நிகழ்வில் பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-23)

## பரிசளிப்பு விழா

யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா, கௌரவ விருந்தினராக பாடசாலை (பழைய மாணவன்) ஓய்வு நிலை அதிபர் வ.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7)

# பெண்களுக்கான வன்முறைக்கு உரியவர் பொறுப்புக்கூற வேண்டும்

## யாழ்.மாவட்ட பெண்கள் சமாசம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நாம் எக்காரணம் கொண்டும் எச்சந்தர்ப்பத்திலும் பொறுக்க முடியாது. வன்முறைகள் ஆரோக்கியமான சமூகத்தை ஒருபோதும் கட்டியெழுப்பாது என யாழ்.மாவட்ட பெண்கள் சமாசம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மார்க்கண்டு லோகராணி மற்றும் அமிர்தலிங்கம் மைதிலி ஆகியோருக்கு நடந்த கொடூரத்தை கண்டித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நாம் எக்காரணம் கொண்டும் எச்சந்தர்ப்பத்திலும் பொறுக்க முடியாது. வன்முறைகள் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பாது. யாருக்கு நடந்தது என்பதற்கு அப்பால் உரியவரை பொறுப்புக்கூற வைப்பதே இவ்வாறான வன்முறைகளை ஒழிப்பதற்கான முக்கிய வழியாகும். எனவே, வன்முறைகளை ஒழிப்பதற்காக யாவரும் உழைப்போம்.

சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் இதற்காக முன்வராவிட்டால் இவ்வாறான செயல்கள் நடப்பதை தவிர்க்க முடியாது.

இது எமது கடமை மட்டுமல்ல மக்களாகிய உங்களது கடமை என்பதை யாவரும் உணர்வீராக என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஷிராணிக்கு எதிரான வழக்கு 19 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

ஷிராணிக்கு எதிரான வழக்கு பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தனது சொத்துகளை வெளிப்படுத்த தவறினாரென முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுப்பதற்கான திகதி எதிர்வரும் 14 இருந்து 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் வேண்டுகோளை ஏற்று ஷிராணி பண்டாரநாயக்க மீதான வழக்கை ஒத்தி வைக்கும் அறிவித்தலை கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய விடுத்துள்ளார்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவிருந்த காலப்பகுதியில் பொதுநலவாய மாநாடு நடக்கவிருப்பதால் இந்த விசாரணையை நடத்துவது தவிர்க்க முடியாத பிரச்சினைகளை தோற்றுவிக்கலாம் என்பதனால் குற்றஞ்சாட்டப்பட்ட ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான திகதியை எதிர்வரும் 14 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கும்படி நீதவானிடம் ஆணைக்குழு ஒரு மனு மூலம் கேட்டிருந்தது.

இதனடிப்படையில் மேற்படி வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கருத்தரங்கில் கலந்து கொள்ள ஜகத் டயஸிற்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

**போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளில் ஒருவரான, மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் கலந்து கொள்ள சர்வதேச செஞ்சிலுவைக் குழு அனுமதிமறுத்துள்ளது என தெரியவருகின்றது.**

இதனால், கடும் கோபத்திற்குள்ளான இலங்கை அரசுக்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுடனான உறவுகள் குறித்து அவசரமாக மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரில் 57 ஆவது பிரிவிற்குத் தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், பின்னர் ஜேர்மனிக்கான பிரதித் தூதுவராகவும் பணியாற்றியவர்.

அமெரிக்காவில் மேலதிக பயிற்சிக் கருத்தரங்கிற்கு அண்மையில் இவரது பெயர் இராணுவத் தளபதியினால், முன்மொழியப்பட்ட போது, அமெரிக்கா அதனை நிராகரித்திருந்தது.


இந் நிலையிலேயே அவுஸ்திரேலியாவில் நடத்தவுள்ள கருத்தரங்கில், மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் பங்கேற்க சர்வதேச செஞ்சிலுவைக் குழு அனுமதி மறுத்துள்ளதாக தெரிய வருகின்றது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் சிட்னியில் நடைபெறவுள்ள ஆபத்தான நிலைமைகளில் சுகாதாரக் கவனிப்பு என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கிற்கு, பொருத்தமான ஒருவரை பரிந்துரை செய்யுமாறு இலங்கை இராணுவத்திடம் சர்வதேச செஞ்சிலுவைக் குழு கோரியிருந்தது.

இலங்கையின் இராணுவத் தலைமையகத்தினால், மேஜர் ஜெனரல் ஜகத் டயஸின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அதனை சர்வதேச செஞ்சிலுவைக் குழு நிராகரித்துள்ளது.

இது இலங்கை அரசாங்கத்திற்கு குறிப்பாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச சமூகத்தின் ஒரு பகுதி, இலங்கையைத் தொடர்ந்து அவமானப்படுத்தி வருவதாக தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு, 1989ஆம் ஆண்டு அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்த சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுக்கு 2006 ஆம் ஆண்டில் போருக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் எவை என்பது தெரியாததல்ல என்றும் தெரிவித்துள்ளது. (அ-2)



கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தனது உத்தியோகபூர்வ கடமையை நேற்று முன்தினம் பெறுப்பேற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# ஜனாதிபதி மஹிந்தவின் தீர்மானம் குறித்து கேள்வியெழுப்ப முடியாது

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் தீர்மானம் குறித்து எவரும் கேள்வி எழுப்ப முடியாது என சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசரை ஜனாதிபதியே நியமித்தார். ஜனாதிபதியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு சவால் விடுக்க எந்தவொரு நீதிமன்றத்திற்கோ அல்லது நபர்களுக்கோ அதிகாரம் கிடையாது.

ஜனாதிபதியின் தீர்மானங்களுக்கு எதிராக வழக்குத் தொடரவும் முடியாது.

நாட்டின் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் இந்த விசேட வரப்பிரசாதம் காணப்படுகின்றது.

ஜனாதிபதிக்கு எதிராக இதற்கு முன்னர் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

பிரதம நீதியரசரை நீதிமன்றுக்கு அழைத்து விசாரணை நடத்துவதனை நான் கடுமையாக எதிர்க்கின்றேன் என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்ட விதம் பிழையானது எனத் தெரிவித்து மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்துவினால் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளின் போது சட்டமா அதிபர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கு காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரித்தினம், பரிசளிப்பு விழா, நுழைவாயில் கலைமாடம் திறப்பு நிகழ்வு, சரஸ்வதி சிலை திரை நீக்கம் ஆகிய நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் கல்லூரி அதிபர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், வேலணை பிரதேச தவிசாளர் சி.சிவராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகளில் நுழைவாயில் கலை மாடத்தை வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் திறந்து வைக்கவுள்ளார். கல்வித் தாய் சரஸ்வதி சிலையை வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா திரைநீகக்ம் செய்து வைப்பார். (அ-5)

* * *

யா/ஊரெழு கணேசா வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோஸ்வே பெயின்ட் நிறுவன பொதுமுகாமையாளர் வைத்திலிங்கம் கிரிதரன், சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலய ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.பாலசுப்பிரமணியம், யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) செ.தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பரிசில்களை திருமதி அனுஷா கிரிதரன் வழங்குவார். (அ-7)

# வடக்கு தேர்தல் பிரசாரத்தில் இராணுவ பிரசன்னம்

## பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த மாதம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பிரசாரங்களில் இராணுவத்தின் தலையீடுகள் முக்கிய அம்சமாக இருந்ததாக பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களின் இறுதி அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தின் தலையீடுகள் மற்றும் அதன் செல்வாக்கு தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக பாதிப்பை ஏற்படுத்தியமை தொடர்பில் கட்டாயம் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் எதிர்காலத்தில் இராணுவ தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்தநிலையில், உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் மீதான வன்முறைத்தாக்குதல்கள் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்துடன் உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் ஜனநாயக செயன்முறையில் முக்கிய பங்கு வகிப்பதால் அவர்களின் சுயாதீனத்திற்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தேர்தல் பிரசாரத்தின் போது விதி முறைகளை மீறுதல், அரச வளங்களை முறைகேடாக பயன்படுத்தல் போன்றவற்றை கட்டுப்படுத்தி தற்போதுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்த சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழுவொன்று கட்டாயம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் பரிந் துரைத்துள்ளனர். (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் 33 நாடுகள் பங்கேற்கும்

## உறுதியான முடிபு என்கிறது கொழும்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க 33 நாடுகளின் அரச தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதனை உறுதி செய்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்கப் போவதாக 33 நாடுகளின் தலைவர்கள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

மாநாட்டை புறக்கணிக்கப் போவதாக கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

30 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், 10 வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள், சனல் 4 ஊடக நிறுவனம், 10 வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மற்றும் புலம்பெயர் புலி ஆதரவு தமிழர்கள் போன்ற தரப்பினர் மாநாட்டை சீர்குலைக்க முயற்சித்து வருகின்றனர் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இந்தியா உள்ளிட்ட சுமார் 19 நாடுகளின் அரச தலைவர்கள் இம் மாநாட்டில் பங்கேற்பது குறித்து இதுவரையில் உறுதிபடக் குறிப்பிடவில்லை. (அ-2)

# 2 புதல்விகள் மீது துஷ்பிரயோகம்; தந்தைக்கு 126 ஆண்டுகால சிறை

(கொழும்பு)

இரண்டு மகள்மாரை துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 120 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மகள்மாரையும் அடிக்கடி பாலியல் ரீதியாக வன்புணர்ந்த தந்தைக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துள்ளது.

மேல் நீதிமன்ற நீதவான் பேமா ஸ்வர்னாதிபதி இந்தத் தண்டனை விதித்துள்ளார்.

ஹொரவப்பொத்தான பகுதியைச் சேர்ந்த 41 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் பாலியல் குற்றச் செயலில் ஈடுபட்ட ஒருவருக்கு வழங்கப்பட்ட மிகக் கடுமையான தண்டனை இதுவெனக் கருதப்படுகின்றது.

இரண்டு மகள்மாருக்கும் நட்டஈடாக தலா பத்து இலட்சம் ரூபாவையும், அபராதமாக தலா 25ஆயிரம் ரூபாவையும் செலுத்துமாறும் அவருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நட்டஈடு மற்றும் அபராதப் பணத்தைச் செலுத்தாத காரணத்தினால் மேலும் ஆறு ஆண்டுகள் கூடுதல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மொத்தமாக 126 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தந்தையை வீட்டுக்கு அழைத்துச் செல்ல விருப்பமா என பிள்ளைகளிடம் நீதவான் கேட்டபோது விரும்பவில்லை என பிள்ளைகள் தெரிவித்துள்ளனர். (அ-2)



யாழ்.காங்கேசன்துறைப் பகுதியில் அனுமதியின்றி பிடித்து வைக்கப்பட்டிருந்த சிங்கி இறால், நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து மீண்டும் கடலில் விடப்பட்டுள்ளது.

# பறிபோகுமா வடமாகாண ஆளுநரின் பதவி?



வடக்கு மாகாணசபை செயற்படத் தொடங்கியுள்ள நிலையில், முக்கியமான மூன்று விவகாரங்கள் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன.

முதலாவது, இராணுவ பின்னணி கொண்ட ஆளுநரான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை நீக்குவது.

இரண்டாவது, வடக்கிற்கு தனியான பொலிஸ் பிரிவை உருவாக்குவது.

மூன்றாவது, வடக்கில் படைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் வாழ்வில் இராணுவத் தலையீடுகள் அற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பது.

இவையனைத்தும் தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டு, பிரசாரப்படுத்தப்பட்ட விவகாரங்கள்தான்.

ஆனால், அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவற்றை வலியுறுத்தியதற்கும், இப்போது வடக்கு மாகாண அரசை நிறுவிய பின்னர், அதனை வலியுறுத்த ஆரம்பித்துள்ளதற்கும் வேறுபாடுகள் உள்ளன.

வடக்கு மாகாணசபையின் முதல் அமர்வு கடந்த 25 ஆம் திகதி நடந்த போது, தமது முதலாவது உரையிலேயே இந்த மூன்று விவகாரங்கள் குறித்தும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்தியிருந்தார். இதனால் இந்த விவகாரங்கள் கடும் வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

இராணுவ பின்னணி கொண்ட ஆளுநரான மேஜர் ஜெனரல் சந்திரசிறி, தேர்தலின் போது எவ்வாறு பக்கசார்புடன் நடந்து கொண்டார் என்பதைச் சுட்டிக்காட்டியே முதல்வர் விக்னேஸ்வரன், அவரை நீக்கிவிட்டு, ஜனாதிபதி வடக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக் கூடிய சிவில் ஆளுநர் ஒருவரை நியமிப்பார் என்று நம்புவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதனை, தான் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசராக இருந்தபோதிலும் முதல்வர் விக்னேஸ்வரன் இதனை அதிகார தொனியில் குறிப்பிடவில்லை. பரிவான- பவ்வியமான முறையிலேயே இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

ஏனென்றால், இது சிக்கலான காரியம் என்பதும், அரசாங்கத்துடன் முட்டி மோதுவதன் மூலம் இதனைச் சாதிக்க முடியாது என்பதும் அவருக்கு நன்றாகவே தெரியும். அரசியல் களத்துக்கு அவர் வந்த பின்னர் இதனை பலமுறை எடுத்துக் கூறியுள்ளார்.

வடக்கு மாகாணசபையில் தனது முதல் உரையில் கூட 13-வது திருத்தச்சட்டத்தை ஓர் ஓட்டைப் பாத்திரம் என்று குறிப்பிட்டிருந்தார். இத்தகைய 13-வது திருத்தச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபையின் அதிகார வரையறை எது என்பது முதல்வர் விக்னேஸ்வரனுக்குத் தெரியாததல்ல. அதனால்தான், அவர் இந்த விடயத்தை கடுந் தொனியில் கூறாது விட்டிருந்தார்.

குறிப்பாக வடக்கில் தமிழ் பேசும் பொலிஸாரைக்கொண்ட படைப்பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் வடக்கில் இருந்து இராணுவத்தினர் விலக்கப்பட்டு- இராணுவ தலையீடுகள் அற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதில் காட்டிய கடுந்தொனியை அவர் ஆளுநர் விடயத்தில் காட்டவில்லை.

ஆனால், இராணுவ ஆளுநரை ஏற்பதில்லை என்ற உறுதிப்பாட்டில், முதல்வர் விக்னேஸ்வரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இருந்ததால்தான் ஆளுநர் முன்பாக பதவியேற்பதையும் தவிர்த்திருந்தனர்.

ஆளுநரை நீக்கும் விடயத்தில் முதல்வர் விக்னேஸ்வரன் கடும் போக்கை வெளிப்படுத்த தயங்குவதற்குக் காரணம், ஆளுநரை நியமிக்கும் அதிகாரங்கள் ஜனாதிபதிக்கே உரியவையாகும். யாரை ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி விரும்புகிறாரோ அவரை நியமிக்கலாம். அதுபோலவே ஆளுநரை நீக்கும் விடயத்திலும் அவரே தன்னிச்சையாக முடிவெடுக்கலாம்.

மத்திய அரசில் ஜனாதிபதி எந்தளவுக்கு நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டுள்ளாரோ, அதுபோலவே மாகாணங்களில் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர், ஒரு சிற்றரசர் போலவே செயற்படுகிறார். இதில் மாகாண சபைகளின் விருப்பு வெறுப்புக்கள் குறித்தெல்லாம் கவனிக்கப்படுவதில்லை.

வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர்தான் அங்கு ஆளுநர் விவகாரம் வெடித்தது. அதற்கு முன்னதாகவே கிழக்கிலும் அத்தகைய பிரச்சினை தோன்றிவிட்டது. இந்தளவுக்கும் அங்கே ஆளும் கட்சியாக இருப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிதான். அங்குள்ள ஆளுநரும் ஓர் இராணுவப் பின்னணி கொண்டவர்தான்.

கடற்படைத் தலைமை அதிகாரியாக இருந்த வைஸ் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரம, அங்கு மாகாண சபையின் எல்லா நடவடிக்கைகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளதாக ஆளும் தரப்பினரே குற்றம் சாட்டுகின்றனர்.

கிழக்கில் ஒரு மாகாண சபை செயற்படுகிறது என்றே கருத முடியாதளவுக்கு ஆளுநரின் தலையீடுகள் அங்கு காணப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸ் கூறிகிறது. இது போன்ற சூழல் வடக்கில் இன்னமும் ஏற்படவில்லை. ஏனென்றால் இப்போதுதான் வடக்கு மாகாணசபை செயற்படத் தொடங்கியுள்ளது.

ஆனால், கிழக்கினை ஒத்தநிலை விரைவிலேயே வடக்கிலும் ஏற்படலாம். எனினும் ஒரு சிக்கல் உள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகளில் அளவுக்கதிகமாக குறுக்கிடுவாரேயானால்- தனது அதிகாரத்தனத்தை வெளிப்படுத்துவாரேயானால் அது சர்வதேச அளவில் இலங்கை அரசாங்கத்துக்கு கெட்டபெயரை ஏற்படுத்திக்கொடுக்கும்.

எனவே, கிழக்கில் ஆளுநர் செயற்படுவதை விட, வடக்கு ஆளுநர் அதிகாரப் போக்குடன் செயற்படுவதற்கு கொஞ்சம் தயங்கக்கூடும். வடக்கு மாகாணசபையின் சுதந்திரமான சிவில் நிர்வாகத்துக்கு இராணுவ ஆளுநர் தடையாக இருப்பார் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தை அரசாங்கம் ஏற்குமா என்பதுதான் முக்கியமான கேள்வி.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் இந்தக் கோரிக்கைக்கு ஊடகங்களில் பதிலளித்துள்ள வடக்கு மாகாண ஆளுநர், தாம் ஜனாதிபதியின் பிரதிநிதி என்றும் தம்மை நீக்கும்படி கோரும் உரிமை முதலமைச்சருக்கு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஆளுநரை நீக்கும்படி கோரும் சட்டரீதியான உரிமை, முதலமைச்சர் ஒருவருக்கு இல்லை என்பது உண்மையே. என்றாலும் மாகாண அரசுடன் இணங்கிச் செயற்படும் ஒருவரையே ஆளுநராக நியமிக்க வேண்டியது ஜனாதிபதியின் கடமையாகும்.

ஏனென்றால் அத்தகைய இணக்கப் போக்கைக் கொண்டிராதவரை நியமிப்பதால், மாகாணசபையின் செயற்பாடுகள் முடங்கிவிடும். இந்தியாவில் பெரும்பாலும் மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளும் ஒருவரையே மத்திய அரசு ஆளுநரா்க நியமிப்பது வழக்கம்.

மத்திய ஆட்சியை சார்ந்தவர்களாக இருக்கும் அவ்வாறான ஆளுநர்கள் மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆட்சியில் இருந்தாலும் விட்டுக்கொடுப்புடன் நடந்துகொள்ளும் போக்கையே பெரும்பாலும் கடைப்பிடிப்பதுண்டு.

உதாரணத்துக்கு, தற்போது தமிழ் நாட்டில் உள்ள அ.தி.மு.க. அரசுக்கும் மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசுக்கும் பெரிய இடைவெளி இருந்தாலும் தமிழ் நாட்டின் ஆளுநராக இருக்கும் காங்கிரஸின் மூத்த பிரமுகரான ரோசையா மாநில நிர்வாகத்தில் அதிகம் தலையிடுவதில்லை.

ஆனால், வேறு சில மாநிலங்களில் ஆளுநர், அளவுக்கு மீறி செயற்படுவதான குற்றச்சாட்டுக்களும் உள்ளன.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க அரசுடன் இணங்கிச் செயற்படும் ஆளுநர் போன்று ஒருவரையே வடக்கு மாகாண சபை விரும்புகிறது. கிழக்கும் கூட அதற்கு விதிவிலக்கானதாக இருக்கமுடியாது.

வடக்கு மாகாணசபையின் இந்தக் கோரிக்கையை ஐ.தே.கவும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், இதனைப் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வாய்திறக்கவேயில்லை.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சதான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அத்தகைய கோரிக்கையை அரசாங்கத்திடம் விடுக்கவில்லை என்று கூறியிருந்தார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச எந்த முடிவையும் எடுக்காமல் இழுத்தடிப்பாரேயானால், அது ஆளுநருக்கும் வடக்கு மாகாணசபைக்கும் இடையிலான இடைவெளிகளை அதிகப்படுத்தும்.

சிலவேளைகளில், முன்னாள் இராணுவ அதிகாரியான ஆளுநரை கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று உடனடியாக நீக்கிவிட்டார் என்ற குற்றச்சாட்டு தெற்கிலிருந்து வருவதைத் தவிர்ப்பதற்காக அவர் சிறிதுகாலம் அமைதி காக்கலாம்.

வடக்கு மாகாணசபையை அரசாங்கம், அபிவிருத்தி நோக்கியும் நல்லிணக்கப் போக்குடனும் அணுகப் போகிறதா என்பதை, ஆளுநர் விவகாரமே தீர்மானிக்கப் போகிறது.

வடக்கு மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்தோ, இராணுவத்தை விலக்குவது குறித்தோ முடிவெடுக்க ஜனாதிபதி கூடுதல் அவகாசத்தை எடுக்கலாம். ஏனென்றால், அதில் அதிகமான சிக்கல்களை தாண்ட வேண்டும் என்று அவர் நியாயப்படுத்தலாம்.

ஆனால், ஆளுநர் விவகாரம் அப்படியன்று. அது ஒரு சாதாரண விடயம். அதைச் செய்வதற்கு அதிகம் யோசிக்கவோ, எவருடைய அனுமதியையும் பெறவோ வேண்டியதில்லை. அதற்கான தற்துணிவு ஜனாதிபதியிடமே உள்ளது.

இதையும் மீறி வடக்கில் இருந்து இராணுவ பின்னணி கொண்ட ஆளுநரை மாற்ற முடியாது என்று அரசாங்கம் கடும்பிடிவாதத்தில் இருக்குமேயானால், அது வடக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் ஏற்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை என்ற சமிக்ஞையைத்தான் வெளியுலகிற்கு வெளிப்படுத்தும்.

கே.சஞ்சயன்

# சாம்சங்கின் புதிய டேப்லட்




சாம்சங் நிறுவனமானது விரைவில் தனது 12 அங்குல அளவுடைய புதிய டேப்லட்டினை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்நிலையில் குறித்த டேப்லட் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் அடிப்படையில் 2560 x 1600 Pixel Resolution உடைய தொடு திரையினைக் கொண்ட இந்த டேப்லட்டில் 2.3GHz Qualcomm Snapdragon 800 Processor இணைக்கப்பட்டுள்ளது.

இது தவிர கூகுளின் Android 4.3 Jelly Bean இயங்குதளத்தினை அடிப படையாகக் கொண்டு செயற்படக்கூடியதாக இருப்பதுடன் 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா மற்றும் 2 மெகாபிக்சல்களை உடைய துணையான கமெரா போன்றவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

# ஸ்மாட் கைபேசியில் பயன்படுத்தும் விசேட கமெரா



தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியின் பயனாக இன்று பல்வேறு மாற்றங்கள் அசுர வேகத்தில் இடம்பெற்றுவருகின்றன.

அதிலும் ஸ்மார்ட் கைப்பேசிகளின் கண்டுபிடிப்புக்கு பின்னர் அவற்றின் பயனானது பரந்துபட்டதாகக் காணப்படுகின்றது.

தற்போது ஸ்மார்ட் கைப்பேசியினை அடிப்படையாகக் கொண்டதும் தலையில் அணியக்கூடியதுமான விசேட கமெரா ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கமெராவானது மூளையிலிருந்து பிறப்பிக்கப்படும் அலைகளை துல்லியமாக அறிந்து ஒரு நபரின் விருப்பங்களை பதிவு செய்யும் ஆற்றல் உடையதாகக் காணப் படுகின்றது.

# 170 மில்லியன் ஐபாட்கள் விற்பனை


அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்த ஐ-பாட் 2010ஆம் ஆண்டு முதல் 2013 ஒக்ரோபர் மாதம் வரை 170 மில்லியன் ஐபாட்களை விற்றுள்ளதாக அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். சான்பிரான்சிஸ்கோவில் அப்பிள் நிறுவனம் சார்பில் மெகா ஐ.பாட் வெளியிடப்பட்டது. இவ்விழாவில் உரையாற்றிய அப்பிள் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தற்போது 4 இலட்சத்து 75 ஆயிரம் டப்லட் பயன்பாட்டில் இருப்பதாகவும் 170 மில்லியன் ஐ-பாட் விற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# கூகுள் ஸ்மாட் கடிகாரம்


இணையத்தள முதல்வனான கூகுள் தற்போது பல்வேறு துறைகளிலும் தனது வேரை ஆழமாக ஊன்றி வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக தற்போது ஸ்மார்ட் கடிகார உற்பத்தியிலும் முனைப்புக்காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

Google Now எனும் புதிய வசதியுடன் அன்ரொயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுவரும் இந்த சாதனமானது 2014ஆம் ஆண்டின் முற்பகுதியில் வெளிவரலாம் என எதிர்பார்க் கப்படுகின்றது.




# மனித மூளையைப்போன்று இயங்கும் ஐ.பி.எம். கணனி




மனிதனின் மூளையை போன்று மின்னணு இரத்தத்தால் இயங்கும் அதிநவீன கணனியை ஐபிஎம் நிறுவனம் வடிவமைத்துள்ளது. மனித உடல் உறுப்புகளிலேயே மிகவும் முக்கியமானது மூளை, அதனை கருத்தில் கொண்டே மின்னணு இரத்தத்தால் இயங்கும் கணனியை வடிவமைத்துள்ளனர். அதாவது, மனிதனின் மூளையை போன்று கணனி ஒருவகை திரவத்தால் சக்தியை பெறுவதுடன் அதே திரவத்தால் தன் வெப்பத்தை நீக்கி குளுமைப்படுத்தி கொள்ளும் திறன் கொண்டதாக இருக்கும்.

மூளையில் உள்ள குருதிச் சுற்றோட்டத்தொகுதி போன்ற ஒருவகை மின்னணு இரத்தத்தை கணனியின் வழியாக ஓடச் செய்வதன் மூலம் அந்தக் கணனிக்கான சக்தியை அதன் உள்ளே கொண்டு செல்லும். அத்துடன் அதிலிருந்து வெப்பத்தை வெளியேயும் கொண்டுவரும். தற்போதுள்ள கணனிகளில் ஒரு சதவிகிதம் மட்டுமே தகவல்களை பெறுவதற்கு பயன்படுவதாகவும், இந்த புதிய முறை பயன்படுத்தப்பட்டால் சிறப்பான கணனியை தம்மால் உருவாக்க முடியும் என்று ஐபிஎம் நிறுவனத்தின் டாக்டர் பாட்ரிக் ருச் மற்றும் டாக்டர் புருனோ மைக்கல் தெரிவித்துள்ளனர்.

மேலும் 2060ஆம் ஆண்டளவில் முழுமையடையக் கூடிய இந்த முயற்சியின் மூலம், தற்போது மிகப் பெரியதாக இருக்க கூடிய கணனியை சிறியதாக உருவாக்கிவிட முடியும் என்றும் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் நடந்த பொது அறிவுப் போட்டியில் இக்கணனி மனித மூளையை தோற்கடித்து விட்டது. மனித மூளை 20 வாட்ஸ் சக்தியை மட்டுமே பயன்படுத்துகின்றது என்றும், கணனி 85,000 வாட்ஸ் சக்தியை பயன்படுத்துகின்றது இது நியாயமற்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த கேள்விகளுக்கு புதிய மின்னணு இரத்தத்தால் செயற்படும் கணனிகள் பதில் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

# ஆரோக்கிய வாழ்வுக்கு கைப்பட்டி



மனிதனின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஊட்டச்சத்து, உடற்பயிற்சி, ஒழுங்கான தூக்கம் போன்றன அவசியமாகும்.

எனினும் இவற்றினை சரியான அளவில் பேண வேண்டியதும் அவசியமாகும்.

இந்த குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டு தற்போது AIRO எனும் கைப்பட்டி (Wristband) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இது உணவிலுள்ள ஊட்டச்சத்துக்களின் அளவு, மன அழுத்தத்தின் அளவு, உடற் பயிற்சியின் அளவு மற்றும் தூக்கத்தின் அளவு ஆகியவற்றினை மதிப்பிட்டு கூறுகின்றது. இதன் விலையானது 199 டொலர்கள் ஆகும்.

# தமிழர் தலைவிதி தமிழர் கரங்களிலேயே!

## தமிழர் தரணியில் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு ஒரே ஒரு வழி

ஆயிரக்கணக்கான மொழிகள் இன்று இப்பூவுலகில் உள்ளன. அவற்றுள் எமது தாய் மொழியாம் தமிழ் மிகப் பெரும் பழைமை வாய்ந்த மொழியாகும்: மேலும் பல்லாயிரம் ஆண்டு கால இலக்கண, இலக்கிய வரலாற்றை கொண்டதுமாகும். இதனால் தமிழை தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களாகிய நாம் உலகின் அனைத்து மொழிகளுக்கும் இலக்கணமும் இலக்கியமும் உண்டென நம்புவது இயல்பேயாகும். ஆனால் உண்மை நிலை ஆச்சரியப்படத்தக்க வகையில் முற்றிலும் மாறுபட்டதாகும்.

இன்றைய உலக மொழிகளில் தமக்கென எழுத்து வடிவம் வகுத்துக் கொண்ட மொழிகள் தமிழும், தமிழின மொழிகளும் மாத்திரமேயாகும். இது ஒரு முக்கிய வரலாற்று உண்மையாகும். மேலும் இன்று வரை எழுத்து வடிவம் மேற்கொள்ளாத மொழிகள் பல மேற்குலக நாடுகளிலும் கீழைத்தேய நாடுகளிலும் உள்ளன.

ஆயிரமாண்டு கால இலக்கிய வளர்ச்சியுடைய மொழிகள் உலகிலே பதினொன்றுக்கு மேல் இல்லை. அவை மேற்குலக நாடுகளில் மூன்று மொழிகள்; ஆங்கில மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலியமொழி என்பனவும் மேற்குக்கிழக்கு ஆசியாவில் மூன்று மொழிகள்;பாரசீக மொழி, சீன மொழி, ஜப்பானியமொழி என்பனவும் தென்னாசியாவில் ஐந்து மொழிகள்; தமிழ் மொழி, கன்னட மொழி, மலையாள மொழி, தெலுங்குமொழி, சமஸ்கிருத மொழி என்பனவும் ஆகும். ஆரிய இன மொழிகள் என்று கூறப்படும் வடஇந்திய தாய் மொழிகள் அனைத்தும் பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் வரை இலக்கியமற்ற மொழிகளாகவே இயங்கின. சிலவற்றிக்கு இன்று கூட இலக்கியம் கிடையாது.

மேற்குலகில் கிரேக்க, இலத்தீன் மொழிகள் தமிழுடன் ஒத்த இலக்கியப் பழைமையுடையன. ஆனால் நீடித்த இலக்கிய வாழ்வுடையன அல்ல. இலக்கண வகையில் தமிழும் உயர் தனிச் செம்மொழிகளாகிய சமஸ்கிருத மொழி, கிரேக்கமொழி, இலத்தீன் மொழி, அரபு மொழி, பாரசீகமொழி, எபிரேயமொழி ஆகியவை மட்டுமே தமக்கென இலக்கணம் வகுத்துக் கொண்டவை. மற்ற எல்லா மொழிகளும் இவற்றை பின்பற்றி அண்மைக்காலத்திலேயே இலக்கணம் வகுத்துள்ளன.

### முச்சங்கங்களும் அவற்றின் தொன்மையும்

பாண்டிய மன்னனான காஞ்சின வழுதி முதல் கடுங்கோவன் வரை உள்ள எண்பத்தொன்பது அரசர்கள் முதற்சங்கத்தைப் பராமரித்து வந்துள்ளார்கள். சகல நல்லொழுக்க நற்குணங்கள் பொருந்திய சான்றோர்களாம் தமிழ் புலவர்களாகிய அகத்தியனார், முரிஞ்சியூர், முடிநாகராயர், நிதியின் கிழவன், தொல்காப்பியனார் போன்றோர் முச்சங்கங்களிலிருந்து பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிதை, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் போன்ற பலநூல்களை இயற்றியும், ஆராய்ந்தும் தமிழை வளர்த்துள்ளார்கள்.

தம் உயிரினும் மேலாக தமிழ் மொழியை கருதி அதற்காகவே தம் வாழ்வை அர்ப்பணித்துள்ளனர். உள்ளொளி பெற்ற இப்புலவர் பெருமக்களுக்குள்ளே அகத்திய முனிவர் முதன்மையானவராகத் திகழ்ந்தார். பொதிகை மலையை உறைவிடமாகக் கொண்ட அவர் சிவபெருமான் மீது மிகுந்த பக்தி செலுத்தி சிவனருளால் தமிழ் மொழியை ஞான உணர்வால் பெற்றுக் கொண்டவர் ஆவார். இனிமையும், அழகும் என்றும் இளமையும் கொண்டதாக தமிழ் இப்பூமியில் என்றென்றும் விளங்கும் எனும் வரத்தையும் சிவனிடம் பெற்றுக் கொண்டுள்ளார். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் எனும் முத்தமிழையும் இறைவனிடமிருந்து கற்றுணர்ந்து "அகத்தியம்" எனும் ஒப்பற்ற முத்தமிழ் இலக்கண நூலை வகுத்துள்ளார்.

இவர் முதற் சங்கத்திலிருந்த புலவர்களுக்குள் முதன்மையானவர். அம்முதற் சங்கத்தின் ஆரம்பம் இற்றைக்கு பதினாறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இம்முதற் சங்கம் நாலாயிரத்து நாநூற்றி நாற்பது ஆண்டுகளாக செயற்பட்டது. இச்சங்கத்தில் நாலாயிரத்து நாநூற்றி நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்தார்கள்.

அடுத்த இடைச்சங்கம் கபாலி புரத்தில் மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகளாக செயற்பட்டது. இதில் மூவாயிரத்து எழுநூறு புலவர்கள் இருந்தனர். அகத்தியரின் சீடரான தொல்காப்பியர் இதில் சிறப்புப் புலவராவார். இவர் அகத்தியம் எனும் இலக்கண நூலை வழியொற்றி தொல்காப்பியம் எனும் இலக்கண நூலை வகுத்தார். இன்று வரை அது உள்ளது.

அடுத்து வந்த கடைச்சங்கம் இப்பொழுதுள்ள தென் மதுரையில் நானூற்றி நாற்பத்தொன்பது புலவர்களால் ஆயிரத்து எண்ணூற்றி ஐம்பது ஆண்டுகளாக செயற்பட்டது. முதல், இடை, கடைச் சங்கங்கள் நூற்றிதொண்ணூற்றியேழு பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் இயங்கியது. ஒன்பதினாயிரத்து தொளாயிரத்து தொண்ணூறு ஆண்டுகளாக இம்மூன்று சங்கங்களும் தமிழுக்கு பெரும் புகழ் சேர்த்தன.

### மொழியின் பெயர் உச்சரிப்பு நன்மை தரக் கூடிய அதிர்வாக இருத்தல் வேண்டும்

அடுத்து அகத்தியரின் எச்சரிக்கைக் குறிப்பொன்றை நாம் அவசரமாக கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு பொருளுக்கும், ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு தெய்வத்திற்கும், ஒவ்வொரு பெயருள்ளது. தெய்வப் பெயரை திரும்பத் திரும்ப உச்சரிப்பதால் பலமான சக்தி மிக்க அதிர்வலைகள் மனித மனத்திடமிருந்து உண்டாகி அதே மனிதனுக்கும் நன்மைகளை விளைவிக்கிறது.

தொண்டையில் காற்று அதிர்வால் பேச்சு உண்டாகிறது. செவிப்பறையில் ஒலி அலைகள் அதிர்வதால் கேட்டல் நடைபெறுகிறது. அடிமனதில் ஏற்படும் அதிர்வு மேல் மனதில் எண்ணமாக வெளிப்படுகிறது. திரும்பத் திரும்ப மனதில் ஏற்படும் நல்லெண்ண அலைகள், சக்தி மிக்கதாகி நன்மையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறே தவறான அல்லது தீய எண்ண அதிர்வுகள் பலப்படும் போது தீய விளைவுகள் உண்டாகின்றன.

ஆலயங்களில் மந்திரங்களை உச்சரிக்கும் போது சுத்தமாக சரியான உச்சரிப்புடன் உச்சரிக்க வேண்டும் என்பது ஆகம விதி. மந்திரங்களில் உயர்வான மந்திரங்களாகச் சொல்லப்படுபவை இவை நாமங்களேயாகும். திரும்பத் திரும்ப சரியான உச்சரிப்புடன் சொல்லப்படும் போது மந்திர அதிர்வுகள் பலமடைந்து மந்திரங்களுக்குரிய தெய்வங்களின் சாந்நித்தியம் பலமடைந்து அத்தெய்வங்களில் பக்தி பண்ணும் பக்தர்களுக்கான துன்பங்கள் நீங்கி அவர்கள் கோரிக்கைகள் நிறைவேறுவதை பலரும் அனுபவபூர்வமாக அறிவர்.

இவ்வாறே தமிழ்த்தாயும் தமிழர்களுக்கு ஒரு தெய்வமாகிறாள். இதனால் தான் தமிழர்களுக்கு சிறந்த அதிர்வுகளை ஏற்படுத்தும் தமிழ் எனும் பெயரை சரியாகக் கணித்தே எமது மொழிக்கு எம் முன்னோர்கள் சூட்டியுள்ளனர்.

மொழியைக் காக்க வேண்டுமானால் மொழியின் பெயரை முக்கியமாகக் காக்க வேண்டும். மொழியின் பெயர் சிதைந்து போனால் அதாவது தவறான உச்சரிப் பாகப் போனால் அம்மொழியும் அம்மொழி பேசும் மக்களும் கீழ் நிலையடைவர். தமிழர்களும் ஆங்கிலேயர் ஆட்சிவரை பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ் என்னும் பெயருடன் சிறப்பாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பது வரலாற்று உண்மையாகும்.

இன்று உலகம் முழுவதும் பெரும்பாலும் ஆங்கிலக் கலண்டரே பாவனையில் உள்ளதால் பெரும்பாலான மக்கள் அன்றாடப் பாவனையில் ஆங்கிலக் கலண்டரின் திகதியையே பாவிக்கிறார்கள். அதன் போது இன்று 2ஆம் திகதி அல்லது 3ஆம் திகதி அல்லது 4ஆம் திகதி என்று உலக மக்களில் பெரும்பாலானோர் எண்ணுவதுதான் அந்தந்த திகதிக்கான எண்கள் அந்தந்த நாட்களில் மிகவும் பலம் பெற காரணமாகின்றன. இதனால் அந்தந்த திகதிகளில் அந்தந்தத் திகதிக்குரிய அதிர்வுகள் பலம் பெறுவதால் அத் திகதிகளில் பிறக்கும் குழந்தைகள் அத்திகதிக்குரிய எண்களின் ஆதிக்கம் உடையதாகின்றன. இவ்வாறே 9 எண்கள் உலக மக்கள் எல்லோரையும் ஆட்சி செய்கின்றன.

இனி குழந்தைகளுக்கு பெயர் வைத்து அதை திரும்பத் திரும்ப கூப்பிடுதல், எழுதுதல் மூலம் பல தடவைகள் அந்தப் பெயரைப் பாவிப்பதால் அந்தப் பெயருக்கான அதிர்வுகள் பலம் பெறுகின்றன. பெயர் மூலம் நாம் உண்டாக்கும் அதிர்வுகள் பிறந்த திகதிக்கான அதிர்வுகளுடன் ஒத்துப் போகுமாயின் வாழ்க்கை அதிர்ஷ்டமாகும். இல்லாவிடில் வாழ்க்கை துன்பமாகும். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டதே அதிர்ஷ்ட எண் விஞ்ஞானம் எனும் கலையாகும்.

இந்துவேத மந்திரங்களை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் மிகப் பழைய காலத்திலேயே ஒன்றிலிருந்து 108 வரையிலான ஒவ்வொரு எண்களுக்குமான பலன்களை சித்திரங்களாக தீட்டி பழைய கால முனிவர்கள் வைத்திருப்பதை வெளியிட்டுள்ளனர்.

உதாரணமாக 16 எண்ணுக்கான பலனாக சிங்காசனத்தில் இருக்கும் அரசனின் தலை மீது இடி விழுந்து அரசன் கீழே விழுவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

Japan =16

11815

இந்த நாட்டின் மீது இரு அணுகுண்டுகள் விழுந்து இரண்டாம் உலக யுத்தத்தில் Japan தோல்வியடைந்தது. அண்மையில் மீண்டும் Japan இல் அணு மின் நிலையங்கள் சுனாமியாலும் நிலநடுக்கத்தாலும் பாதிப்படைந்து தீய அணுக்கதிர்கள் அங்கு பரவியுள்ளன. வரலாற்றின் முக்கிய கதாபாத்திரங்களான இராமனுடைய வாழ்க்கையையும் இயேசுவினுடைய வாழ்க்கையையும் ஆராயும் போது 15 ஆயிரம்வருடங்களுக்கு முன்பிருந்தே மிகச் சிறப்பாக இருந்த தமிழ் இனம் கடந்த 2,3 நூற்றாண்டுகளாக சீரழியத் தொடங்கியதற்கான காரணம் பளிச்செனத் தெரிகிறது.

4+1+4+1+3=13

தமிழ் மொழியின் உயிர் எழுத்துக்கள் 12, மெய்எழுத்துக்கள் 18, உயிர்மெய் எழுத்துக் கள் 216, ஆயுத எழுத்து 1 ஆக மொத்தம் 247. இதை 2+4+7 எனக் கூட்டி 108 இற்குள் கொண்டுவர 13 ஆகிறது. தமிழ் என்ற தமிழ்ப்பெயரைவிட Tamil என்ற ஆங்கிலப் பெயரே பாவனையில் மிக அதிகமாக உள்ளது. Tamil = 13 ஆங்கிலப் பெயரின் மூலம் 13

4+1+4+1+3=13

என்ற பாவ எண்ணே தமிழர்களை தற்சமயம் ஆள்கிறது. நிற்க, இதிகாச புருசனான இராமனை வட இந்திய அயோத்திய மக்கள் இராமன் என்பதற்கான ஆங்கில பெயருக்குரிய உச்சரிப்பான Raman=13 என்றே அழைத்து வந்தார்கள். இதன்மால் பின்னாளில் இந்தமந்திரம் Ram, Ram

2+1+4+1+5=13

என்றே உச்சரிக்கப்படலாயிற்று. Tam Tam என்று உச்சரிக்கப்படவில்லை.

Raman என்ற அதிர்வு பாவ எண்ணான 13 ஆதலால் காலம் செல்லச் செல்ல அது வலிமை பெற்று இராமன் முடி சூட வேண்டிய அன்று முடி துறந்து வனவாசம் செல்ல காட்டிற்கு மனைவியுடன் செல்ல வேண்டியதாயிற்று. காட்டிலும் சீதையை அரக்கன் கவர்ந்து சென்றான். பின்னாளில் திரும்பவும் சீதையையும் பிள்ளைகளையும் பிரிந்து வாழ வேண்டியதாயிற்று. இச்சோதனைகள் Raman என்ற பெயரால் வந்த 13 எனும் பாவ எண்ணே ஏற்படுத்தியது.

இனி இயேசுவும் அவரது சீடர்களும் சேர்ந்து 13 எனும் எண்கொண்ட ஒரு குழுவினராக குறிப்பிடப்பட்டார்கள். இயேசு ஆரம்பத்தில் இருந்தே தனது முடிவை அறிந்திருந்தார். யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்பதை அறிந்திருந்தும் அவனையும் தன் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டார். அந்நாளில் யூதர்கள் இயேசுவையும் அவர்களது சீடர்களையும் 13 எனும் எண்ணாலேயே குறிப்பிடத் தொடங்கினார்கள். கால கதியில் 13 எனும் பாவ எண் வலிமை பெற யூதர்களால் இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார்.

13ஆம் எண்ணின் தீமையினால் இது நடந்தது என்ற விடயம் உலகமெங்கும் பரவியது. அதனால்தான் உலகமெங்கும் உள்ள வெள்ளையர்கள் 13 ஆம் எண்ணை துர்அதர்ஷ்ட எண்ணாக கருது கிறார்கள். அதனால் Hotel களில் ஆஸ்பத் திரிகளில், தொடர்மாடிகளில், 13 எனும் எண் இடம் பெறாமல் பார்த்துக் கொள்கிறார்கள். இதனால் தான் சந்திர னுக்கு அனுப்பப்பட்ட அப்பலோ 13 எனும் விண்கலம் வெற்றி பெறவில்லை என அவர்கள் நம்புகிறார்கள்.

(தொடரும்)

**தமிழர் தலைவிதி தமிழர் கரங்களிலேயே!**
**தமிழர் தரணியில் தலை நிமிர்ந்து வாழ்வதற்கும்; இலங்கையில் இனங்களுக்கான ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் உள்ள ஒரே ஒரு வழி TAMIL என்று எழுதுவதற்கும் உச்சரிப்பதற்கும் பதிலாக THAMEIL என்று எழுதியும் உச்சரித்தும் வர தமிழர் வாழ்வில் வெற்றி நிச்சயம்.**

பொன்னாலை வரதராஜப் பெருமாள பதியில் அமைந்த பிருந்தாவனம் தியான மண்டபத்தில் இயங்கும் உயிர் ஆன்மீக மன்றத்தின் வெளியீடு.

E.Mail Address:-
newjaffnauyir.com
தொடர்புகளுக்கு —
0776028734, 0778442171

# வடக்கு மக்களின் கனவுகளை மீன்பிடி அமைச்சர் கவனத்திலெடுக்க வேண்டும்

## செல்வம் எம்.பி தெரிவிப்பு

(மன்னார்)

வட மாகாணத்தில் வாழும் ஒவ்வொரு மக்களது கனவுகளையும் அமைச்சர் டெனிஸ்வரன் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் மன்னார் மண்ணில் தெரிவு செய்யப் பட்ட முதல் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அமை ச்சர் என்ற வகையில் அவர் மக்களது அபிலாசைகளை அவரது அமைச்சின் ஊடாக முடிந்த அளவிற்கு திறம்பட செயற் படுத்துவார் என்ற நம்பிக்கை தமக்கு உன்டென்றும் பாராளுமன்ற உறுபபினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.



மன்னார் மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினர், நடந்து முடிந்த வட மாகாணசபைத் தேர்தலில் மாபெரும் வெற்றியீட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பினரையும், மன்னார் மண்ணின் மைந்தனும் வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி கௌரவ அமைச்சரும் சட்டத்தரணியுமான பா.டெனிஸ்வரன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை வாழ்த்தி கௌரவ வரவேற்பு விழாவை ஒன்றை நடத்தியுள்ளனர்.

மேற்படி நிகழ்வு பனங்கட்டிகொட்டு கிழக்கில் அமைந்துள்ள அவர்களது சங்க ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி இடம பெற்றது. நிகழ்வினை சங்கத்தின் செயலாளர் டி.சகாயநாதன் தலைமை தாங்கி நடத்தியிருந்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் உரையாற்றும் போது, தமிழ் தேசியத்துக்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் தனது விசேட நன்றிகளைத் தெரிவிப்பதாகவும். தான் ஐந்து மீவட்ட மக்களுக்கும் பாகுபாடின்றி தனது சேவையை செய்வேன் என்றும் தனக்கு கிடைத்துள்ள அனைத்து புகழும் தனது அன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனையே சாரும் என்றும் அவரை ஒருபோதும் எதற்காகவும் தான் விட்டுக் கொடுக்கப்போவதில்லை என்றும் தனது விசேட நன்றியைத் தெரிவித்ததோடு பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதரா தலிங்கத்திற்கும் தனது நன்றிகளை தெரிவித்தார்.

தொடர்ந்து சங்க வளாகத்தினுள் மரநடுகை கலைநிகழ்வுகளும் வாழ்த்துப்பாக்கள் மற்றும் ஆசி உரைகளும் இடம்பெற்றன. (ம-4)

# நகை மோசடியில் ஈடுபட்ட நபர்களுக்கு கடூழிய சிறை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொல்லவிளான்குளம் பகுதியில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான நகைகளை மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 3 நபர்களுக்கு தனித்தனியாக ஒரு வருடகடூழியச் சிறைத்தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்

கடந்த யூலை மாதம் 2ஆம் திகதி அன்று தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் விசாரணையின் பின் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நகைகள் மீட்கப்பட்டு உரிமையாளர்களிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளன. (ம)




# மாற்று வலுவுள்ளோர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

(கிளிநொச்சி)




கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மாற்று வலுவுள்ளோர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான மருத்துவ பரிசோதனை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனின் முயற்சியால் இலங்கையில் முதல் முறையாக மாற்றுவலுவுள்ளோருக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான முதலாவது மருத்துவ பரிசோதனை தலைநகர் கொழும்புக்கு வெளியே நடைபெற உள்ளது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பிரிவு, கிளிநொச்சி மாவட்ட பாதுகாப்பு தலைமை அலுவலகத்துடன் இணைந்து இதற்கான ஒருங்கிணைப்பை மேற்கொண்டுள்ளன.

மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழுவின் 10 மருத்துவ அதிகாரிகள் கொண்ட குழுவினர் இதற்காக கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை தரவுள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோருக்கு கொழும்பில் மட்டும் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான மருத்துவ பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வழமையாகும். தற்போது தான் முதல் முறையாக இவ்வாறான பரிசோதனை கொழும்புக்கு வெளியே மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப பெற மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ம-254)

# மோத கடூழிய சிறை



(முல்லைத்தீவு)

திருமுறிகண்டி பிரதேசத்தில் மனைவியை தடியால் கடுமையாக தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு வார காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 6 மாதகால கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

மேற்படி நபர் தன்னை தாக்கி இரண்டு தடவைகள் தான் வைத்தியசாலையில் இருந்ததாகவும், வீட்டிற்கு செல்ல முடியாத நிலையில் இருந்ததாகவும் மனைவி மன்றில் தெரிவித்திருந்தார். (ம)

# இடையூறு விளைத்த நபருக்கு துப்புரவு பணி

(முல்லைத்தீவு)


மதுபோதையில் கலகம் விளைவித்தவர் சமுதாய சீர்திருத்தத்தில் துணுக்காய் கல்விளான் பகுதியில் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட நபரை சமுதாய சீர்திருத்த பிரிவினூடாக நீதிமன்றிலும் மாஞ்சோலை வைத்தியசாலையிலும் 6 நாட்களுக்கு துப்புரவு வேலைகளில் ஈடுபடுமாறு நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபர் குடித்துவிட்டு தகாத வார்த்தைகளைப் பேசி பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். (அ-ம)



முல்லை. மாவட்ட அழகக கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், க.பொ.த உயர்தரம் கற்கின்ற மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் மல்லாவி அனிஞ்சியன்குளம் தமிழ் வித்தியாலயத்தில் சங்கத்தின் தலைவர் ம.யோகதாஸ் தலைமையில் கௌரவிக்கப்பட்ட போது...

# லண்டன் பிரதமர் இந்தியா பயணம்



(லண்டன்)

இந்திய - லண்டன் நாடுகளுக்கிடையிலான நல்லுறவை பலப்படுத்தும் விதமாக லண்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஒருநாள் பயணமாக இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார்.

டில்லியில் எதிர்வரும் 14 ஆம் தகதி பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கும் அவர், இரு நாடுகளுக்கிடையிலான தொடர்புகள், பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதற்கு முன்னர் லண்டன் பிரதமராக டேவிட் கமரூன் பதவியேற்ற 2010ஆம் ஆண்டு முதன் முறையாக இந்தியாவிற்குச் சென்று பிரதமர் மன்மோகன சிங்கை சந்தித்தார்.

பின்னர் இரண்டாம் முறையாக கடந்த பெப்ரவரி மாதம் அவர் இந்தியா வந்துளளார்.

தற்போது மூன்றாவது முறையாக அவர் இந்தியா வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

லண்டன் பிரதமராக டோனி பிளேயர் பதவி ஏற்ற பொழுது அந்நாட்டிற்கு சென்ற பிரதமர் மன்மோகன் சிங், லண்டன் பிரதமராக டேவிட் கமரூன் பதவியேற்ற பின்னர் ஒருமுறையேனும் லண்டன் சென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## நடவடிக்கை எடுக்காவிடின் தூதரகத்தை மூடும் நிலை உருவாகும்

# மாலைத்தீவிற்கு இந்தியா எச்சரிக்கை

(மாலே)

மாலைத்தீவுக்கான இந்தியத் தூதரின் கார் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காவிடின்தூதரகத்தை மூடவேண்டிய சூழல் ஏற்படும் என்று இந்தியா மாலைதீவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை, மாலைதீவிலுள்ள இந்திய தூதரகம் முன்பு நிறுத்தப்பட்டிருந்த் தூதரின் கார் மீது மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது குறித்து இந்தியத் தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது,

இது மிகவும் கண்டனத்துக்குரியது. கடந்த ஜனவரியிலும் இதே போல் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அந்த வழக்குக்கு இன்னமும் முடிவு எட்டாத நிலையில், மீண்டும் அதுபோன்ற தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மாலைதீவு அரசு இது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது வருத்தம் அளிக்கிறது. இதுபோன்ற நிலை நீடித்தால், இரு நாடுகளின் உறவிலும் பாதிப்புகள் ஏற்படுவதுடன், தூதரகத்தை மூட வேண்டிய நிலை உருவாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டோர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாலைதீவு ஜனாதிபதி முகமது வாஹீத் ஹஸன் உறுதியளித்துள்ளார்.


இதுகுறித்து ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

"இந்தியத் தூதரின் கார் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்ய, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி பொலிஸாருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்" என்று தெரிவித்தார். (2)

## பிடல் கஸ்ரோவை சந்தித்தார் அன்சாரி

பெரு நாட்டில் தன் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு 2 நாள் பயணமாக கியூபா சென்றுள்ள துணை குடியரசு தலைவர் அமீது அன்சாரி, நேற்று அந்நாட்டு முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்தார்.

இந்த சந்திப்பு சுமார் 35 நிமிடங்கள் நீடித்தது. கியூபாவின் வெளியுறவு அமைச்சர், கியூபாவுக்கான இந்திய தூதர் சி.ராஜசேகர் மற்றும் துணை ஜனாதிபதி அன்சாரியின் மனைவி ஆகியோர் இந்த சந்திப்பின் போது உடன் இருந்தனர். (2)



குஜராத் சென்றிருந்த பூஜ்ஜிய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி காந்திநகரில் பா.ஜ.பிரதமர் வேட்பாள ரும் அம் மாநில முதல்வருமான நரேந்திரமோடியை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# மாநாட்டில் பங்கேற்கும் முடிவை மன்மோகன் வாபஸ் பெற வேண்டும்

## திருமாவளவன் கொதிப்பு

(புதுச்சேரி)

**தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பதை தவிர்க்க வேண்டும். காங்கிரஸ் உயர்மட்ட குழுவினர் இம்மாநாட்டில் இந்தியா பங்கேற்கும் என்ற முடிவை நேற்றுமுன்தினம் எடுத்துள்ளனர். இதுபெரும் அதிர்ச்சியை அளிப்பதாக அமைந்துள்ளதென விடுதலை சிறுத்தை கட்சித் தலைவர் திருமாவளவன் தெரித்துள்ளார்.**

விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் திருமாவளவன் எம்.பி. நேற்றைய தினம் புதுவை வந்திருந்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாயமாநாட்டில் இந்திய அரசு பங்கேற்க கூடாது என ஒட்டுமொத்த தமிழ் சமுதாயமும் வலியுறுத்தி வருகிறது. தமிழக சட்டசபையில் ஏகமனதாக தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந் நிலையில்நேற்றுமுன்தினம் கூடிய காங்கிரஸ் உயர்மட்ட குழு இம் மாநாட்டில் இந்தியா பங்கேற்கும் என்ற முடிவை எடுத்துள்ளது. இது பெரும் அதிர்ச்சியை அளிக்கிறது.

தி.மு.க. தலைவருக்கு பிரதமர் எழுதியுள்ள கடிதத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கப்படும் என்று கூறியிருந்தார். ஆனால் அதற்கு நேர்மாறான முடிவை காங்கிரஸ் உயர்மட்ட குழு எடுத்துள்ளது.



இந்த முடிவை காங்கிரஸ் கட்சி திரும்ப பெற வேண்டும். தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பதை தவிர்க்க வேண்டும்.

இந்தக் கோரிக்கை புறக்கணிககப்பட்டால் காங்கிரஸ் கட்சி பின்னடைவைத்தான் சந்திக்கும். 1967 ஆம் ஆண்டு ஏற்பட்ட பின்னடைவை விட கூடுதல் பாதிப்பை அது ஏற்படுத்தும். தமிழக காங்கிரஸ் தலைவர்களும் இம் மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது என நேரடியாகவே வேண்டுகோள் விடுத்து இருந்தனர். ஆனால் அவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்படவில்லை.

காங்கிரஸ் கட்சியின் இந்த முடிவை கண்டித்தும், இந்த முடிவை திரும்ப பெறக்கோரியும் நாளைமறு தினம் ஞாயிற்றுக்கிழமை எனது தலைமையில் சென்னையில் விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் அடுத்த 2 ஆண்டுகளுக்கான புதிய தலைவர் தேர்வு செய்யப்படவுள்ளார். புதிய தலைவராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தெரிவு செய்ய கூடாது என பொதுநலவாய நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். இது தொடர்பாக இந் நாடுகளுக்கு விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் மின் அஞ்சல் அனுப்பப்படும் என்றும் கூறியுள்ளார். (அ-2)

## பூட்டானுக்கு 100 கோடி ரூபா நிதியுதவி வழங்கியது இந்தியா

(திம்பு)

பூட்டான் புதிய அரசின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இந்திய சார்பில் 100 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பூட்டானுக்கான இந்தியத் தூதர் வி.பி. ஹரன் இதற்கான காசோலையை பூட்டான் பிரதமர் ஷெரிங் டாப்கேவிடம் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

இமாலயப் பகுதியில் அமைந்துள்ள நாடான பூட்டான் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்காக 11ஆவது ஐந்தாண்டு திட்ட நிதியுதவியாக 500 கோடி ரூபா வழங்க இந்தியா ஒப்புக் கொண்டது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த பூட்டான் நிதி அமைச்சர் நாம்கே டோர்ஜி, இந்த நிதி வங்கியின் மூலம் குறிப்பிட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு நாட்டில் வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதியைப் பெருக்கவும் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்தார். (2)

# கொழும்பு மாநாடு குறித்து மன்மோகன்-வாசன் சந்திப்பு


அகில இந்திய தலைவர்களின் கருத்துக்களையும் தமிழ் மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில் நல்ல முடிவு எடுக்கப்படுமென பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்கை அவரது அலுவலகத்தில் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் நேற்று சந்தித்து பேசினார். அப்போது பிரதமா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பின்னர் ஜி.கே.வாசன் நிருபர்களிடம் கூறியதாவது,

பிரதமரை சந்தித்த போது, இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாடு தொடர்பாக தமிழக மக்களிடம் பிரதிபலிக்கும் உணர்வுகளை எடுத்துக் கூறினேன்.

தொடர்ந்து இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகும் தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.



எனது கருத்துக் களை பிரதமர் மிகவும் உன்னிப்பாக கேட்டு அறிந்தார்.

பின்னர் அவர் என்னிடம் கூறும் போது, 'அகில இந்திய தலைவர்களின் கருத்துக்களையும், தமிழக மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் வகையில் நல்லமுடிவு எடுக்கப்படும். தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கும் விரைவில் நிரந்தர தீர்வு காணப்படும்' என ஜி.கே. வாசன் கூறினார். (2)

# உலகில் சக்தி வாய்ந்தவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியானது

அமெரிக்காவின் போர்ப்ஸ் பத்திரிகை, உலகின் சக்தி வாய்ந்த அரசியல் தலைவர்கள், நாட்டின் தலைவர்கள், வர்த்தக ஜாம்பவான்கள் ஆகியோரின் பட்டியல்களை வெளியிட்டுள்ளது.

72 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ள ஒரு பட்டியலில், காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு 21ஆவது இடம் கிடைத்துள்ளது.

அதே நேரத்தில், இந்த பட்டியலின்படி சக்திவாய்ந்த பெண் தலைவர்களில், சோனியா 3ஆவது இடத்தில் இருக்கிறார். சோனியாவுக்கு முன்பாக ஜேர்மனி ஜனாதிபதி அங்கேலா மெர்கல் முதல் இடத்திலும், பிரேசில் ஜனாதிபதி டில்மா ரவுசப் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்த பட்டியலில், பிரதமர் மன்மோகன்சிங், சோனியாவை விட 7 இடங்கள் பின்தங்கி உள்ளார். போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள மற்றொரு பட்டியலில் உலகின் சக்தி வாய்ந்த 100 பெண்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதில், சோனியாவுக்கு 9ஆவது இடம் கிடைத்துள்ளது.

இதேவேளை, உலகின் செல்வாக்கு மிகுந்தவர்கள் பட்டியலில் ரஷ்ய ஜனாதிபதி புடின் முதலிடம் பிடித்துள்ளார், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளாக இப்பட்டியலில் முதல் இடம் பிடித்திருந்த ஒபாமா, இந்த முறை ஒரு இடம் பின் தள்ளப்பட்டுள்ளார். முதல் இடத்தை ரஷ்ய ஜனாதிபதி புடின் பிடித்துள்ளமைக்கு காரணம் சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் திட்டத்தை தடுத்தமை மற்றும் ரஷ்யாவல் 13 ஆண்டு கால ஆட்சியில் ஆதிக்கம் செலுத்தியமையுமாகும்.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி 2 ஆவது முறை பதவியேற்றபோதிலும் அரசின் நிதிச்சுமை, பற்றாக்குறை, தவறான கொள்கை முடிவுகளால் அரசு அலுவலகங்கள் 16 நாட்கள் முடங்கின. இந்தவிடயம் உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

மேலும் அமெரிக்க உளவு நிறுவனமான என்.எஸ்.ஏவின் இரகசியங்களை வெளியிட்ட எட்வர்ட் ஸ்நொடனுக்கு அமெரிக்க எதிர்ப்பை மீறி ரஷ்யா தஞ்சம் அளித்த விவகாரமும் புடினின் செல்வாக்கு அதிகரிக்க காரணம். அதுவே ஒபாமாவின் செல்வாக்கு சரிவுக்கு காரணம் என்று போர்ப்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. (அ-2)

> இதற்கு முன்பு நாம் என்ன நினைத்தோமோ, அப்படித்தான் இப்போது நாம் அனைவரும் இருக்கிறோம்.
> - கௌதம புத்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வெள்ளைத்துணி விரிப்பு

புத்தபிரானின் போதனைகள், சிந்தனைகள் பற்றி அறிந்தவர்கள் அவரை வழிபடுவதை விட அவரின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதிலேயே கவனம் செலுத்துவர்.

புத்தபிரான் உலகப்பற்று நீக்கியவர். அதனால் தான் புத்தருக்கு ஒரு பூமாலை கூடச் சாத்துவதில்லை.

உலகப் பற்றை நீக்கியவர்களே! புத்தபிரானின் போதனைகளை முன்னெடுக்கவல்லார். புத்தபிக்குகள் என்போர் புத்தபிரானின் போதனைகளை முன்னெடுப்பதற்காகக் காவி தரித்து, சமயத் துறவிகள் போல் கடும் துறவு பூண்டு, பிச்சாபாத்திரம் ஏந்தி அதில் கிடைக்கும் உணவை உண்டு பணி செய்வதாகும்.

உண்மையில் புத்தபிக்குகள் அணிகின்ற காவி உடையின் கதையே அற்புதமானது. பௌத்த சமயம் சார்ந்த ஒருவர் இறந்துவிட்டால், அவரின் இறுதிச் சடங்குக்கு செல்பவர்கள் ஒரு மஞ்சள் துண்டைக் கொண்டு செல்வார்கள். அவ்வாறு கொண்டு செல்லப்படும் மஞ்சள் துண்டுகளை மயானத்தில் இறந்தவரின் உடலில் வைப்பார்கள். இவ்வாறு இறந்தவரின் உடல் மேல் வைக்கப்பட்ட மஞ்சள் துண்டுகளை எடுத்து அவற்றைப் பொருத்தி ஆடையாக அணிவதே புத்த பிக்குகள் காவி தரிக்கும் வழக்காறு.

எனினும் இற்றைக் காலத்தில் இந்த நடைமுறை மலையேறிவிட்டது. புடைவைக் கடைகளில் புத்த பிக்குகளுக்கான காவி விற்பனைக்கு வந்திருக்கும்போது பழையவற்றைக் கூறி நாம் பகையா்வது புத்திசாலித்தனமல்ல.

எனவே அதை அப்படியே விட்டுவிடலாம். எனினும் இறந்தவரின் உடல் மேல் வைக்கப்பட்ட மஞ்சள் துணி என்பது இனி யாருக்கும் பயன்படாது என்ற நிலையில், அதை அணிவது என்பது புத்தபிக்குகளின் ஆடை கூட இன்னொருவரின் தேவைக்குரியதாக இருக்கக்கூடாது.

இறந்தவரின் உடலில் சாத்தப்பட்ட மஞ்சள் துண்டு பற்றற்றது. எனவே புத்தபிரானின் போதனைகளை பரப்புவோர்-அதனைக் கடைப்பிடிப்போர் எங்ஙனம் கடும் துறவியாக இருக்க வேண்டும் என்பதற்கான இக்கதை நல்ல எடுத்துக்காட்டு.

இனி இங்கு நாம் குறிப்பிட முற்பட்ட விடயம் பௌத்த பிக்குகள் அமரும் ஆசனங்களுக்கு வெள்ளைத் துணி விரிக்கும் நடைமுறை பற்றியதாகும்.

புத்த பிக்குகள் அமரும் ஆசனங்களுக்கு வெள்ளைத்துணி விரித்தல் என்பது தென்பகுதிக் கலாசாரமாக இருக்கலாம். அந்தக் கலாசாரத்திற்கு நாம் அறியப்பட்டவர்கள் அல்ல.

எனவே வடபுலத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் புத்த பிக்குகள் பங்கேற்பதாக இருந்தால், அவர்கள் இங்கு இருக்கக்கூடிய மதத் தலைவர்களுக்குரிய மரியாதைகளுக்கு அமையவே நடத்தப்பட வேண்டும்.

எனினும் சர்வமதத் தலைவர்கள் கலந்து கொள்ளும்போது புத்தபிக்குகள் அமரும் ஆசனத்திற்கு மட்டும் வெள்ளைத் துணி விரிப்பது எதற்காக?

அத்தகைய நடைமுறை ஏனைய மதத் தலைவர்களை அவகௌரவப்படுத்துவதாக அமையாதா?

புத்த பிக்குவின் ஆசனத்திற்கு வெள்ளைத் துணி விரிப்பதற்கு நாம் எதிர்ப்பல்ல. வெள்ளைத் துணி விரிப்பதாக இருந்தால் அதனை சகல மதத் தலைவர்களுக்குமாகச் செய்யுங்கள். இல்லையேல் வெள்ளை விரிப்பை கைவிடுங்கள்.

இதைவிடுத்து, புத்த பிக்குவின் ஆசனத்திற்கு வெள்ளை விரித்து ஏனைய மதத் தலைவர்களைப் புண்படுத்துவது அழகல்ல.

# மருந்துகளின் விலைகளை நிர்ணயிக்க விசேட குழு

(கொழும்பு)

மருந்துப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயிப்பதற்கான விசேட குழுவொன்றை நியமிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின்படி அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர், வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தற்போது சந்தையிலுள்ள மருந்துப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமென அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தக்குழு விரைவில் அதன் அறிக்கையை தயாரிக்கும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# விவேக சூடாமணி வகுப்புக்கள் ஆரம்பம்

இல.9, செட்டித்தெரு லேன், கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிஷன் யாழ்ப்பாணம் கிளையில் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளால் பிரதி சனிக்கிழமைகளில் காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை வேதாந்த வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

இதில் தீபாவளி தினமான நாளை பகவான் ஆதிசங்கரரால் வேதாந்த சாதகர்களின் நன்மை கருதி இயற்றப்பட்ட விவேக சூடாமணி பிரகரண (அடிப்படை) கிரந்தம் எனும் நூலின் விளக்கவுரை வழங்கப்படவுள்ளது. இந்நூல் விவேக மகுட மணி எனப் போற்றப்படுகிறது.

எனவே ஆர்வலர்கள் அனைவரும் இந்நிகழ்வில் தவறாது பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-7)

# குறும்பட வெளியீடு

மாக் பில்ம்ஸ் தயாரிப்பில் உருவான உயிர் உள்ளவரை நட்பிருக்கும் எனும் குறும்பட வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஞானசூரியர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறை பீடாதிபதி க.தேவராஜா, சிறப்பு விருந்தினராக ஐ.ஐ.எஸ்.நிர்வாக இயக்குநர் கு.விக்னேஸ், கிருபா லேண்ர்ஸ் நிர்வாகி எல்.கிருபா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார்.

குறும்படத்திற்கான கருத்துரையை அ.ஜேசுராசா வழங்கவுள்ளார். அத்தோடு குமர நர்த்தனாலய மாணவன் வ.ஜவாகரின் நாட்டியாஞ்சலி, உள்ளிட்ட கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. இக்குறும்படத்தை சி.கௌரீசன் எழுதி, தயாரித்து இயக்கியிருக்கின்றார். (அ-9-23)

# விசேட கல்விச் செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ். கல்வி வலயத்தால் இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருந்த விசேட கல்விச் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பிரதிப்பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி அறிவித்துள்ளார். (அ)

# பயிற்சிப் பட்டறை நடைபெறாது

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்ப பிரிவினரால் இன்று வரணி ஆசிரியர் மத்திய வள நிலையத்தில் நடத்தப்படவிருந்த செயற்பட்டு மகிழ்வோம் பயிற்சிப் பட்டறை நடைபெறமாட்டாது என தென்மராட்சி வல்யக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார்.

அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-29)

# அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான பௌதிக வள ஆய்வு தொடர்பான கூட்டம் வலய முகாமைத்துவ மண்டபத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார். (அ)




## தர்மத்தை பகிரங்கமாகச் செய்தல்

**இறைவன் கூறுகின்றான்:**

தான தர்மங்களை நீங்கள் வெளிப்படையாகச் செய்தால் அதுவும் நல்லதே. (ஏனெனில் அது பிறரையும் தர்மம் செய்யும்படி தூண்டக்கூடும்) எனினும் அவற்றை மறைத்து ஏழைகளுக்கு வழங்கினால் அது உங்களுக்கு இன்னும் நல்லது. (தர்மங்களால்) அவன் உங்கள் தீமைகளை அழித்து விடுவான். நீங்கள் செய்வதை(யெல்லாம்) அல்லாஹ் நன்கறிந்தவனாகவே இருக்கின்றான்.

(திருக்குர் ஆன் 2:271)




மலர் இயற்கையின் கொடைகளில் ஒன்று. கண்ணுக்கு இனிமைதருவது உள்ளத்தைக் குளிர்விப்பது. பல்வேறு நிறங்களில் வண்ணமலர்கள் மண்ணிலே மலர்ந்திருக்கும். இந்த மலர்கள் யாருக்காக மலர்ந்திருக்கின்றன? இயற்கையின் கொடைகளைப் பயன்படுத்தும் மனிதன் மலர்களையும் பயன்படுத்துகின்றான். மனித வாழ்வியலில் மலர்களின் பயன்பாடு முதலில் அழகுநிலையிலேயே தொடர்புற்றிருந்தது. குறிப்பாக உடலை அழகுபடுத்த மலர்கள் பயன்பட்டன. பெண்களும் ஆண்களும் கூந்தலிலே சூடிக்கொண்டனர். ஆரமாக்கி அணிந்து கொண்டனர். மலர்களைத் தந்த இயற்கையின் ஆற்றலைக்கண்டு வியந்தபோது இயற்கையை வழிபடத் தொடங்கினர். அந்த வழிபாட்டுக்கு மலர்களைப் பயன்படுத்தினர். அப்போது மலர்கள் தெய்வத்தின் மடைப்பொருள் என்ற உயர்ந்த நிலையை அடைந்தன.

இயற்கையையே வழிபட்ட மனிதன் இறைவனது எழில்தோற்றத்தை வழிபடும்போது கோயில் வழிபாடு உருவானது. இறைவனது உருவங்களுக்கு அலங்காரம் செய்யும்போது பல்வேறு வண்ண மலர்களையே பயன்படுத்தும் மரபும் உருவாகியது. இதனால் மலர்கள் தனிச்சிறப்பைப் பெற்றன. அந்த மலர்களின் புனைவுச் சிறப்புப் பற்றியும் வகைப்பாடு பற்றியும் தேவாரங்கள் பயனுள்ள பதிவுகளைச் செய்துள்ளன. மேலும் வழிபாட்டிலே மலர்களோடு தூபமும் சாந்தும் இணைந்து கொண்டன.

அப்பருடைய தேவாரம் ஒன்றில் இந்த வழிபாட்டு நடைமுறை சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கோயிலில் தொண்டு செய்யும் வாழ்வியலைப் பரப்பியவர் அப்பரே. உழவாரம் கொண்டு கோவிலின் புறவீதியிலே உள்ள தேவையற்ற புல்பூண்டுகளைக் களையும் பணியை நாள்தோறும் செய்தவர். அதனால் உழவாரப்படையாளி எனும் சிறப்புப் பெயரையும் பெற்றவர். கோவிலின் புறச்சூழலைத் தூய்மையாக்கி மலர்த் தோட்டங்களை உருவாக்கப் பயிற்றியவர்.

மலர்களை வழிபாட்டிற்குப் பயன்படுத்தும்போது இருவகையாகப் பயன்படுத்தலாம். ஒன்று அவற்றைச் செடியிலிருந்து கொய்து தனிமலர்களாகவே இறைவன் பாதங்களிலே சொரிந்து வழிபடுவது. மற்றது பல்வேறு வண்ண மலர்களை எடுத்து அழகுறத் தொடுத்து மாலையாக்கி இறைவனுக்கு அணிவித்து வழிபடுவது. இவ்வாறு மலர் தொடுப்பது இன்று ஒரு பொருளீட்டும் தொழிலாக உள்ளது. பெரிய திருக்கோவில்களின் வீதியிலே மலர் தொடுத்து விற்கின்ற காட்சியைக் காணலாம். அவ்வாறு தொடுக்கின்ற தொடைகளுக்கு அவற்றின் புனைதிறத்திற்கு ஏற்பப் பலபெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. திவாகரம், நிகண்டு, தொடையல், வாசிகை, சிகழிகை, கோதை, படலை, அலங்கல், கத்திகை, பிணையல், அணியல், சுருக்கை,

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

தொடலை, தாமம், தொங்கல், தெரியல், கண்ணி, தார், சூட்டு, மஞ்சரி, ஒலியல், இலம்பகம், மாலை என அவற்றைத் தொகுத்துத் தந்துளது. தொடுத்த மலரும் தூபமும் சாந்து கொண்டு இறைவனை எப்பொழுதும் வணங்கமுடியா விட்டாலும் மாதம் ஒருமுறையேனும் வழிபாடு செய்வது மனதைக் குளிர்விக்கும்.

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்
துங் கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கு மயனொடு மாலுக்
குங் காண்பரியான்
பொடிக்கொண்டணிந்து பொன்னாகிய
தில்லைச் சிற்றம்பலவன்
உடுத்த துகில் கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே

### முதலாவது ஒருநாள் போட்டி

# பாகிஸ்தானை பந்தாடியது தென்னாபிரிக்கா




ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றுள்ளது.

ஷார்ஜாவில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியின் இரண்டாவது பந்திலேயே விக்கெட்டை இழந்த அவ்வணி, 8 விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது. இறுதி நேரத்தில் வெய்ன் பார்னெலின் அதிரடி மூலம் அவ்வணி 183 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக வெய்ன் பார்னெல் 70 பந்துகளில் 56 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 51 பந்துகளில் 37 ஓட்டங்களையும், கிறேம் ஸ்மித், ஜே.பி.டுமினி இருவரும் தலா 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 30 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ஷகிட் அப்ரிடி 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சொஹைல் தன்வீர் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மொஹமட் இர்பான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

4 ஓட்டங்களுக்கே முதலாவது விக்கெட்டை இழந்த போதிலும், இரண்டாவது விக்கெட்டுக்காக 71 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அதன் பின்னர் 4 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களுடன் காணப்பட்ட வேளையில் அவ்வணி பலமான நிலையில் காணப்பட்ட போதிலும், இறுதி 6 விக்கெட்டுக்களையும் 17 ஓட்டங்களுக்கே இழந்து அவ்வணி தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக அஹமட் ஷெஷாத் 92 பந்துகளில் 58 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் 49 பந்துகளில் 31 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 39 பந்துகளில் 28 ஓட்டங்களையும், உமர் அமின் 38 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக இம்ரான் தாஹிர், வெய்ன் பார்னெல் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், மோர்னி மோர்க்கல், லொன்வபோ சொற்சொபி இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக வெய்ன் பார்னெல் தெரிவானார்.

# உபாதைக்குள்ளானார் கேன் வில்லியம்சன்



பங்களாதேஷ், நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் நியூசிலாந்து அணி பங்குபற்றிவரும் நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது போட்டியில் கேன் வில்லியம்சன் உபாதைக்குள்ளாகியிருந்தார்.

இப்போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது உபாதை ஏற்பட்டதோடு, அவர் உடனடியாகவே மைதானத்தை விட்டு வெளியேறியதோடு, எக்ஸ் கதிர்ப் பரிசோதனைக்கும் உள்ளாகியிருந்தார். எக்ஸ் கதிர்ப் பரிசோதனையின் போது அவரது பெரு விரலில் முறிவு ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர் தற்போது நியூசிலாந்திற்குத் திரும்பியுள்ளார்.

அவருக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக அவரால் 6 வாரங்களுக்குக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியாது எனவும், அவர் நியூசிலாந்தில் வைத்து சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வார் எனவும் நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# பெய்லியின் சாதனைகள்

நாக்பூரில் நடைபெற்ற 6ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஜார்ஜ் பெய்லி (31 வயது) 156 ஓட்டங்களை குவித்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். அதன் விபரம் வருமாறு:

ஒரு நாள் கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு எதிராக அவுஸ்திரேலிய வீரர் ஒருவரின் அதிகபட்ச ஓட்டம் இதுதான். இதற்கு முன்பு இந்தியாவுக்கு எதிராக 2003ஆம் ஆண்டு உலக கிண்ண இறுதி ஆட்டத்தில் ரிக்கிபொண்டிங் 140 ஓட்டங்கள் எடுத்ததே இந்த வகையில் சிறந்த ஓட்டமாக இருந்தது.

இந்த தொடரில் பெய்லி இதுவரை 5 ஆட்டங்களில் களம் இறங்கி 474 ஓட்டங்கள் (ஒரு சதம், 3 அரைசதம்) சேகரித்துள்ளார். இதன் மூலம் இரு நாடுகள் இடையிலான ஒரு நாள் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர் என்ற புதிய உலக சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியிருக்கிறார். இதற்கு முன்பு சிம்பாவே வீரர் ஹாமில்டன் மசகட்சா 2009ஆம் ஆண்டு கென்ய தொடரில் 467 ஓட்டங்கள் (5 ஆட்டம்) எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. இரு நாடுகள் இடையிலான தொடரில் அதிக ஓட்டங்கள் சேர்த்த அணித் தலைவரும் பெய்லி தான். முன்னதாக கடந்த மார்ச் மாதத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் தென்னாபிரிக்க அணித தலைவர் டிவில்லியர்ஸ் மொத்தம் 367 ஓட்டங்கள் (5 ஆட்டம்) எடுத்து இந்த சிறப்பை'தக்க வைத்திருந்தார். அது இப்போது பெய்லி வசம் ஆகியிருக்கிறது.



இந்த ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற பெருமையும் பெய்லிக்கு கிடைத்துள்ளது. அவர் 2013ஆம் ஆண்டில் 21 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 1094 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

# குரோசிய டெனிஸ் வீரர் முதல் சுற்றில் வெற்றி

ஊக்க மருந்து பயன்படுத்திய குற்றத்திற்காக 4 மாதங்கள் தடை விதிக்கப்பட்டிருந்த குரோஷியாவின் மரின் சிலிச் முதல் வெற்றி பெற்றுள்ளார். குரோஷியாவின் மரின் சிலிச், பாரிஸ் மாஸ்டர்ஸ் டெனிஸ் போட்டியின் முதல் சுற்றில் வெற்றி பெற்றுள்ளார்.

இவர் பாரிஸ் மாஸ்டர்ஸ் டெனிஸின் முதல் சுற்றில் 5-7, 6-1, 6-4 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் சிஜிலிங்கை வீழ்த்தினார். தனது அடுத்த சுற்றில் பலம் வாய்ந்த ஆர்ஜெண்டீனாவின் மார்டின் டெல் பொட்ரோவுடன் மோதவுள்ளார்.

ஊக்க மருந்து தடைக்குப்பின் களமிறங்கிய முதல் தொடரின் முதல் ஆட்டத்திலேயே வெற்றி பெற்றுள்ளதால் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளார் சிலிச்.

# வெற்றியுடன் முதற்தரப் போட்டியில் இருந்து ஓய்வுபெற்றார் சச்சின்



முதல் தர போட்டியில் தனது கடைசி ஆட்டத்தில் நீண்ட நேரம் களத்தில் நின்று, அதிகமான பந்துகளை எதிர்கொண்ட சச்சின், ஆட்டமிழக்காமல் 79ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றி பெற வைத்தார்.

ரஞ்சி தொடரில் ஹரியாணா அணிக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இது, சச்சினுக்கும் அவரது ரசிகர்களுக்கும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த ஆட்டம் ஹரியாணாவின் லாலி நகரில் நடைபெற்றது.

இரு அணிகளும் முதல் இன்னிங்ஸில் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தன.

2ஆவது இன்னிங்ஸில் ஹரியாணா அணி ஓரளவுக்கு ஓட்டங்களை சேர்த்தது. இறுதியில், மும்பைக்கு வெற்றி இலக்காக 240 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

3ஆம் நாள் முடிவில் அந்த அணி 6 விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சச்சின் 55 ஓட்டங்களுடனும் குல்கர்னி 6 ஓட்டங்களுடனும் இறுதிநாள் ஆட்டத்தைத் தொடங்கினர்.


நிதானமாக விளையாடிய இருவரும் அணியை வெற்றிப் பாதைக்குக் கொண்டு சென்றனர். முடிவில் 93 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 240 ஓட்டங்களை எடுத்து மும்பை வெற்றி பெற்றது.

ஆட்டமிழக்காமல் சச்சின் 79 ஓட்டங்களும் (175), குல்கர்னி 16 ஓட்டங்களும் (72) எடுத்தனர்.

இது, சச்சின் விளையாடிய இறுதி முதல் தர கிரிக்கெட் போட்டியாகும். இதில், புன்னகையுடன் அவர் விடைபெற்றது, மும்பை வீரர்களுக்கு ஆனந்தத்தை ஏற்படுத்தியது. வெற்றியைத் தொடர்ந்து, சச்சினை மும்பை வீரர்கள் தோளில் தூக்கி வைத்து கொண்டாடினர்.

வெற்றிக்குப் பிறகு பேசிய சச்சின், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

# விநாயகர் கார்ட்டுன்; இந்து அமைப்புகள் கண்டனம்




இந்தியா- தென் ஆபிரிக்கா சுற்றுத் தொடர் குறித்து வரையப்பட்ட கார்டூனுக்கு இந்து அமைப்புகளிடமிருந்து கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

தென் ஆபிரிக்காவின் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் சமீபத்தில் கார்ட்டூன் ஒன்று வெளியானது.

விநாயகரின் ஒரு கையில் கிரிக்கெட் துடுப்பும், மற்றொரு கையில் பணக்கட்டுக்களும் பலிபீடத்தில் சி.எஸ்.ஏ.இயின் தலைமை நிர்வாக அதிகாரியை பலி கொடுப்பது போன்றும் உள்ளது. விநாயகரை பி.சி.சி.ஐ. போன்று சித்திரித்து இந்திய சுற்றுப்பயணத்தின் மூலம் தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி லாபமடைவதற்காக சி.எஸ்.ஏ.இயின் தலைமை நிர்வாக அதிகாரி ஹாரூன் லோகர்ட்டை பலி கொடுக்கத் தயாராக இருப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

பிரபல அரசியல் கார்ட்டூனிஸ்ட்டான ஜொனாதன் ஷாப்பிரோ இந்த கார்ட்டூனை வரைந்துள்ளார். இது

மகாசபா மற்றும் அங்குள்ள தமிழ் சங்கம் ஆகியவை கண்டனம் தெரிவித்துள்ளன.

# இலங்கை ஏ அணியை வென்றது கென்யா

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கென்ய அணிக்கும் இலங்கை ஏ அணிக்குமிடையிலான 7 போட்டிகள் கொண்ட 20-இருபது தொடரின் 5ஆவது போட்டியில் கென்ய அணி வெற்றிபெற்றுள்ளது.

நேற்றைய இரண்டாவது போட்டியிலேயே அவ்வணி வெற்றிபெற்றது.

கொழும்பு கிரிக்கெட் கழக மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை ஏ அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணி 20 ஓவர்களில் 134 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத்திலிருந்தே விக்கெட்டை இழந்த அவ்வணியால் வேகமாகத் துடுப்பெடுத்தாட முடியாதிருந்த தோடு மத்திய பின்வரிசை வீரர்கள் ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தனர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை ஏ அணி சார்பாக அஞ்சலோ பெரேரா 47 பந்துகளில் 56 ஓட்டங்களையும் கித்துருவன் விதானகே 15 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கென்ய அணி சார்பாக நெஹேமியோ ஒடியம்போ 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும்ஹரே வரய்யா 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் எலிஜா ஒட்டினோ 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஷெம் கோச்சே கொலின்ஸ் ஒபுயா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

135 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது விக்கெட்டை 7 ஓட்டங்களுக்கே அவ்வணி இழந்த போதிலும் இரண்டாவது விக்கெட்டுக்காக 84 ஓட்டங்கள் பகிரப்பட்டன. இறுதி ஓவரில் 13 ஓட்டங்கள் தேவைப்பட இசுரு உதானவின் பந்துவீச்சில் இறுதிப் பந்தில் வெற்றி ஓட்டம் பெறப்பட்டது.

துடுப்பாட்டத்தில் கென்ய அணி சார்பாக மொறிஸ் ஒவுமா 55 பந்துகளில் 64 ஓட்டங்களையும் டங்கன அலான் 38 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை ஏ அணி சார்பாக லஹிரு ஜெயரத்ன 3 ஓவர்களில் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சீக்குகே பரசன்ன ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்று இடம்பெற்ற முதலாவது போட்டியில் இலங்கை ஏ அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றிருந்ததோடு இரண்டாவது போட்டியில முக்கியமான வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எல்லாம் இப்படியிருந்தால் கிரிக்கெட்டுக்கு நல்லதல்ல



ஷிகார் தவானும், வீராட் ஹோலியும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர் என அணித்தலைவர் தோனி தெரிவித்துள்ளார்.

ஜார்ஜ் பெய்லி 114 பந்தில் 6 சிக்சர், 13 பவுண்டரிகளுடன் 156 ஓட் டங்களும் வோட்சன் 94 பந்துகளில் 3 சிக்சர், 13 பவுண்டரிகளுடன் 102 ஓட்டங்களும் விளாசினர்.

இந்திய தரப்பில் ஜடேஜா, அஸ்வின் தலா 2, புவனேஷ்வர் குமார், முகமது ஷாமி தலா ஒரு விக்கெட்கைப பற்றினர்.

351 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் இந்தியா துடுப்பெடுத்தாடி வெற்றி பெற்றது. ஆட்டநாயகன் விருது ஹோலிக்கு வழங்கப்பட்டது.

இந்த வெற்றியால் 7 ஒருநாள் போட்டி கொண்ட தொடர் 2:2 என சமநிலை அடைந்துள்ளது.

2 ஆட்டங்கள் மழையால் ரத்து செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. கடைசி மற்றும் 7வது ஒருநாள் போட்டி வரும் 2-ம் திகதி பெங்களூரில் நடக்கிறது.

வெற்றி குறித்து இந்திய அணியின் அணித்தலைவர் தோனி கூறுகையில், எல்லா பந்துவீச்சாளர்களின் பந்துகளும் அடித்து நொறுக்கப்பட்டு விட்டது. எல்லா சேசிங்கும் இதுபோன்று அமைந்தால் அது கிரிக்கெட்டின் ஆரோக்கியத்திற்கு நல்லது அல்ல.

7 மணி நேரம் பவுண்டரி, சிக்சர்களை மட்டுமே பார்க்க முடிந்தது. தவானும், ரோகித்தும் 30 ஓவர்கள வரை களத்தில் நின்று நல்ல அடித்தளம் அமைத்து கொடுத்தனர்.

ஷிகார் தவான் சிறப்பாக ஆடி சதம் அடித்தார். அதேவேளையில் ஹோலியின் ஆட்டம் மீண்டும் பிரமாதமாக இருந்தது.

ஒவ்வொரு முறையும் அவர் பதிலடி கொடுத்து ஓட்ட எண்ணிக்கையை நல்ல நிலையிலேயே வைத்திருந்தார் என்று தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஜார்ஜ் பெய்லி கூறுகையில், இவ்வளவு பெரிய ஓட்ட எண்ணிக்கையை குவித்தும் தோல்வியை தழுவியது துரதிர்ஷ்டவசமானது.

ஹோலி ஆட்டம் நம்ப முடியாத வகையில் இருந்தது. இதுபோன்று ஆடினால்எந்த இலக்கும்சாத்தியப்படும்.

ஆட்டத்தின் தொடக்கத்திலேயே விக்கெட்களை வீழ்த்தினால் தான் வெற்றிக்கு வழிகாண முடியும். அடுத்த ஆட்டத்தில் இதில் கூடுதல் கவனம் செலுத்துவோம் என்று தெரிவித்துள்ளார்.

# கூடைபந்தாட்டத்தில் யாழ்.இந்து சம்பியன்

யாழ் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை அலியான்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் பொன் விபுலானந்தனின் 27வது ஞாபகார்ததமாக நடத்திய கூடைப் பந்தாட்டத்தின் இறுதிப்போட்டிகள் யாழ்மத்திய கல்லூரியில் 30.10.2013 மாலை முதல் இடம்பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் யாழ் இந்துக் கல்லூரி சம்பியனாகியது. பெணகள் பிரிவில் யாழ் இந்து மகளிர் கல்லூரி சம்பியனாகியது.

ஆண்களுக்கான போட்டியில் யாழ இந்துக் கல்லூரியும் யாழ்மத்திய கல்லூரியும் மோதின. ஆரம்பத்தில் யாழ் மத்திய கல்லூரி புள்ளிகளைப் பெற்றாலும் தொடர்ந்து சுதாகரித்து ஆடிய யாழ் இந்துக் கல்லூரி போட்டியின அரைப்பாதிக்குப் பின்பாக தனது கட்டுப்பாட்டில் கொணர்ந்தது.

இறுதியில் 68:53 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வென்று தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் பொன் விபுலானந்தா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை தன் வசப்படுத்தியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக யாழ் இந்துவின் கௌரிஷங்கர் தெரிவானார்.

பெண்கள் பிரிவில் யாழ் இந்து மகளிர்கல்லூரி அணியும்சுனனாகம் இராமநாதன் கல்லூரி அணியும் இறுதிப் போட்டியில் மோதின. இப்போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப பெற்றன. இறுதியில் 42:31 என்னும் புள்ளிகள் அடிப்படையில் யாழ் இந்து மகளிர் கல்லூரி சம்பியனாகியது.

# இன்றைய உதைபந்தாட்ட போட்டி

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பொலிகண்டி விண்மீன் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியும்

பிற்பகல் 4.30 மணிக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மோதவுள்ளன.

# பொதுநலவாய மாநா...

வதாக அர்த்தப்படுத் தப்பட்டு ஊடகங்கள் பலவற்றில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

முதலமைச்சர் விக்னேஸ்வரன இந்தியப் பிரதமருக்கு தனிப்பட்ட ரீதியில் நன்றியறிதலை தெரிவிக்கும் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இக்கடிதத்திற்கும் பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

இலங்கைக்கு விஜயம் செய்யும் வேளையில் யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டும் என்று மன்மோகன் சிங்கிற்கு முதலமைச்சர் அழைப்பு விடுத்திருந்தார் என்பதில் சந்தேகமில்லை.

அக்கடிதத்தில் பொதுநலவாய உச்சிமாநாடு பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

இக்கடிதம் வடமாகாண சபையின் முதலாவது அமர்விற்குப் பிறகு உடனடியாக அனுப்பப்பட்டது. எங்களுக்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதும் எங்களது பிரதேசத்துக்கு விஜயம்செய்து நிலைவரங்களை நேரில் பார்க்குமாறு வேண்டு கோள விடுப்பதும் மரியாதையின் நிமித்தமான வழமையான காரியங்களாகும்.

யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுடன் சேர்த்து முதலமைச்சரின் கடிதம் பற்றி ஹிந்துவின் செய்தியில் குறிப்பிடப்பட்டது துரதிர்ஷ்டவசமானது என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

# பிரித்தானிய பிரத...

லும், இம்மா நாட்டில் பங்கேற்கும் வெளிநாட்டு பிரதிநிதிகளை கூட்டமைப்பு சந்திக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ள பல வெளிநாட்டுப் பிரதிநிதிகள், வடமாகாணத்துக்கு விஜயம் செய்து போருக்குப் பின்னரான நிலைமைகளை காண விருப்பம் வெளியிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை செல்லும் போது, மனிதவுரிமைகளுக்கு மதிப்பு அளிக்காத இலங்கை அரசாங்கத்துக்கு தான் கடுமையான செய்தி ஒன்றைத் தெரிவிக்கவுள்ளதாக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# சர்வதேச ஊடகவியலாளர்களை நாட்டைவிட்டு வெளியேற உத்தரவு

(கொழும்பு)

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் ஜக்குலின் பார்க் மற்றும் அதன் உறுப்பினர் ஒருவரையும் நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையின் நுழைவு அனுமதி விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு இலங்கையின் குடிவரவுத் திணைக்களம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக்கு சுற்றுலா நுழைவு அனுமதியில் வந்த இவர்கள், கொழும்பு ஜானகி விடுதியில் சுதந்திர ஊடக இயக்கம் ஏற்பாடு செய்திருந்த பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டதாக இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

சுற்றுலா நுழைவு அனுமதியைப் பயன்படுத்தி இலங்கை வந்த இவர்கள், அனுமதியற்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட காரணத்தினாலேயே, அவுஸ்திரேலியா வைச் சேர்ந்த இவ்விருவரையும் உடனடியாக வெளியேறும்படி கேட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (எ-8)

# விளைவுகளை சந்...

மோகன் சிங எடுப்பார் என மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் நம்பிக்கை வெளியிடடுள்ளார்.

இது தொடர்பில் புதுடில்லியில் பிரதமர் மன் மோகன சிங்கைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையிலான முடிவை தான் எடுப்பேன் என பிரதமர் தன்னிடம் உறுதியளித்ததாகவும் மத்திய அமைச்சர் வாசன் செய்தியாளர்களுக்கு கூறியுள்ளார்.

இதனிடையயே இது தொடர்பில நேற்று இடம்பெற்ற காங்கிரஸ் கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் இம்மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-11)

# சாதனைகள் பல படைத்து 3 ஆவது ஆண்டில் 2014 இல் புதிய பரிமாணத்தில் புதிய கட்டமைப்புடன் காலடி எடுத்து வைக்கும் உங்கள் திசைகாட்டியில் ....

## நாளைய தீபாவளித்தினத்தன்று விசா ஆலோசனையில் இணைந்தால் இரட்டிப்பு வெகுமதி Laptop மடிகணனி இலவசம், அத்தோடு ஆலோசனைக்கட்டணம் 20% கழிவு (நிபந்தனைகளுடன்)





ஊடகவியலாளர் சந்திப்பு

ஊடகவியலாளர் சந்திப்பின் போது திசைகாட்டி குறுாப் தலைவரும் பட்டயக்கணக்காளருமான திரு.எஸ்.செல்வராஜா, ஸ்தாபகரும் மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணியுமான திரு.V.S.நிரஞ்சன், திசைகாட்டி இரண்டாம் நிலைத்தலைவர் Ms.ஏ.பிரவீணா

### எமது தனித்துவமான அம்சங்கள்

- விசா ஆலோசனையில் உள்ளதை உள்ளபடி இயம்பும் மாண்பு அதாவது விசாக்களின் நிச்சயமற்ற தன்மை. நிராகரிக்கப்பட்ட வரலாறுகள் என்பன பட்டவர்த்தனமாக சொல்லப்படும்.
- விசா கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் திகதி குறிப் பிடப்பட்ட பற்றுச்சீட்டு வழங்கப்படுதல். வெற்றி பெறாத சந்தர்ப்பத்தில் முற்பண மீளளிப்பு.
- தொழில் முறையான நவீனத்துவமான சேவை.

மென்பனி தூவும் கனடா தேசத்தில் மாலை நேர உலாவோடு படிக்க மாதாந்தம் 350000.00 வரை உழைக்க 3 வருட விசா பெற சட்ட ஆலோசனை.

ஐரோப்பிய நாடான ஜேர்மன் எல்லை நாடான போலந்தில் படிக்க மாதாந்தம் 125000.00 வரை உழைக்க வெறும் 7 இலட்சம் போதும். இதற் குரிய சட்ட ஆவணங்களை நேரில் பார்வை யிடலாம்.

ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க மாதாந் தம் ஒரு இலட்சம் வரை உழைக்க A/L மட்டும் போதும். IELTS தேவையில்லை.

நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை. 2 வருடத்தில் PR பெற்றால் ஆஸ்திரேலியா குடியேறலாம்.

HOLLAND நெதர்லாந்தில் படிக்க மாதம் 2 இலட் சம் வரை உழைக்க அரியவாய்ப்பு.

இத்தாலி சட்ட ரீதியாகச் செல்ல அரிய வாய்ப்பு. ஒருவருட இரண்டு வருட விசா சட்ட ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்.

### புதிய வரவுகள்

ஆஸ்திரேலியா குடும்ப வியாபார விசா. (துணை வகுப்பு 888)

நிபந்தனைகள் :-

பதிவு பெற்ற வியாபாரம்.
ஒருவருட மொத்த வியாபாரத்தில் மொத்தமாக ஈடுபடுத்தப்பட்ட தொகை 200000.00 ஆஸ்திரேலிய டொலர்.
தனிப்பட்ட அசையும் அசையாச் சொத்து 600000.00 ஆஸி டொலர்.
குடும்பமாக நிரந்தரமாக தங்கியிருந்து வணிகம் செய்யலாம்.
இதனைப்பெற ஆலோசனை வழங்கலிற்கு ஆகக் குறைந்தது 2 வருடங்கள் தேவைப்படலாம்.

ஆஸ்திரேலியா படிக்க உழைக்க தானாகவே குடும்பமாக நிரந்தர குடியுரிமை பெற வாய்ப்பு (வகுப்பு 457) இது தொடர்பான சட்ட ஆவணங்களைப் பார்வையிடலாம்.

அங்கீகரிக்கப்பட்ட டிப்புளோமா பட்டம் (ICTதுறையில்) IELTS அவசியமில்லை.

**UK STUDENT VISA**

புதிதாக எம்மால் இங்கிலாந்தில் நியமிக்கப்பட்ட துணை முகவர் ஊடாக துரித ஆலோசனை

எல்லா நாடுகளிற்கும் VISIT VISAபெற சட்ட ஆலோசனை இன்றில் இருந்து மிகக் குறைவான கட்டணத்துடன்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

(C-5316)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.